விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(C-4991)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 31 வெள்ளிக்கிழமை (15.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 209

## இறுதிப் போரில் சரணடைந்தவர்கள் குறித்து
# தவறான அறிக்கையை இராணுவம் சமர்ப்பிப்பு

(பனிக்கன்குளம்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்தினரிடம் சரண் அடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களது பெயர் விபரப் பட்டியலை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக இராணுவத் தரப்பு உறுதியளித்திருந்த நிலையில், நேற்றைய வழக்கு விசாரணையின் போது புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையாகியவர்களின் பெயர் விபர அறிக்கையே இதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(09-ம் பக்.)

## போலி கடவுச்சீட்டு; யாழ்.இளைஞர் கைது

(கொழும்பு)

போலி கடவுச்சீட்டினைப் பயன்படுத்தி துருக்கி ஊடாக இத்தாலி செல்ல முற்பட்ட நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்துள்ளதாக விமானநிலைய குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே இவ்வாறு

24ஆம் பக்கம் பார்க்க....

## கொத்துக்குண்டு வீசப்படவில்லை!

(கொழும்பு)

விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது கொத்துக் குண்டு பிரயோகம் செய்யவில்லை. அதற்கான தேவையும் எமக்கு இருக்கவில்லை.

அதுமாத்திரமின்றி கொத்துக் குண்டு போன்ற பாரதூரமான ஆயுதங்கள்எம்மிடம்இருக்கவும்இல்லை. விமான படை பிரயோகம் செய்வத

23ஆம் பக்கம் பார்க்க....

## ராஜபக்ஷர்கள் அனைவரையும் சிறைக்குள் அனுப்ப வேண்டும்
### சரத் பொன்சேகா விடாப்பிடி

(கொழும்பு)

முன்னைய ஆட்சியின் போது எல்லா விதமான ஊழல் மோசடிகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ளனர்.

எனவே ராஜபக்ஷர்கள் அனைவரையும் சிறைச்சாலைக்கு அனுப்பியே ஆகவேண்டும் என முன்னாள இராணுவ தளபதியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவி

23ஆம் பக்கம் பார்க்க....



## 16 அத்தியாவசிய பொருட்கள் கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு

(கொழும்பு)

16 அத்தியாவசிய பொருட்களுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.


நேற்றிரவு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த பொருட்களுக்கான விலைகள் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான விபரங்கள் வருமாறு,

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி தோலுடன் - 410 ரூபாய், ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி தோலின்றி - 495 ரூபாய், ஒரு கிலோகிராம் சிவப்பு பருப்பு - 169 ரூபாய், ஒரு கிலோகிராம் தாய்லாந்து நெத்தலி - 495 ரூபாய், ஒரு கிலோகிராம் துபாய் நெத்தலி - 410 ரூபாய்,

23ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தன் தெரிவித்த கருத்து ஆச்சரியமளிக்கிறது - ரெலோ
### உண்மை நிலைப்பாட்டை அறிவியுங்கள்



(யாழ்ப்பாணம்)

போர்க்குற்றங்கள் தொடர்பான உள்ளக விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்குபற்றல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்து ஆச்சரிமளி

23ஆம் பக்கம் பார்க்க....

## இழுவைப்படகு மீன்பிடியை இந்திய அரசாங்கம் ஏற்காது
### யாழ்.இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்பரப்பில் இழுவை படகுகள் மூலமான மீன்பிடித் தொழில் முறையை இந்திய மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்த யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆர்.நடராஜன்,

23ஆம் பக்கம் பார்க்க....



## சமஷ்டியை அனுமதியோம்

(கொழும்பு)

நாட்டை துண்டாக பிரிக்கும் சமஷ்டி முறையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஒற்றையாட்சியை ஏற்படுத்தவே இராணுவத்தினர் உயிரை தியாகம் செய்து போராடினர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். தாய்நாடு எமது என்ற அமைப்பு

23ஆம் பக்கம் பார்க்க....

## 4 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது



24ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
இரசாயனவியல் I
பௌதிகவியல் II



உள்ளே...

## அமெ. உதவிச் செயலர்கள் திருமலைக்கு நேற்று விஜயம்



Ms. Nisha Biswal

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை பாதுகாப்புத் தரப்புடன் அமெரிக்க உயரதிகாரி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான படைத்துறைச் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதவுரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பேச்சு நடத்தியுள்ளார்.

படைத்துறை அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ரொம் மாலினோவ்ஸ்கியுடன் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் மான்பிரீத் ஆனந்த் மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பிரதி தலைமை அதிகாரி ரொபேர்ட் ஹில்டன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அதேவேளை, கருணாசேன ஹெற்றியாராச்சியுடன் முப்படைகளின் தளபதிகள் மற்றும் கடலோரக் காவல்படை தலைமை அதிகாரியும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இருதரப்பு மற்றும் பரஸ்பர ஈடுபாடுள்ள விவகாரங்கள் தொடர்பாக பேசப்பட்டதாக படைத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-11)

# தமிழ் மொழிமூலமான விண்ணப்ப படிவத்தில் தவறுகள் அவதானிப்பு

## சீர்செய்யப்பட்ட படிவங்களைப்பெற அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்புக்கான தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவத்தில் பல தவறுகள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால்,

இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் சீர்செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விரைவில் பெற்று விண்ணப்பிக்கும்படி யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

சுகாதாரம் போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ துறையின் கீழ் தொழில் பயிற்சிக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள் வதற்காக தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடம் இருந்து கடந்த யூன் மாதம் 24 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

குறித்த விண்ணப்பப்படிவத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் அதிகளவான தவறுகள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதாவது பொதுவான விண்ணப்பப்படிவத்தில் ஒரே ஒரு பயிற்சிநெறியை குறிப்பிட்டு பிழையான தலையங்கம் இடப்பட்டுள்ளது.

"துணை மருத்துவ துறையின் கீழ் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுனர் ஆட்சேர்ப்பு" என பிழையான தலையங்கம் இடப்பட்டு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஆனால் வர்த்தமானி அறிவித்தலின்படி குறித்த விண்ணப்பப்படிவத்தில் மருத்துவ ஆய்வுகூட தொழில நுட்பவியலாளர், மருந்தாளர், பௌதிக சிகிச்சையாளர், தொழில் வழி சிகிச்சையாளர், கதிரியலாளர், கண்தொழில்நுட்பவியலாளர், பற் சிகிச்சையாளர், பாடசாலை பற் சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர், பொது சுகாதார பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப்பதிவாளர் ஆகியோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த பயிற்சிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

இது தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் தாம் உடனடியாக குறித்த விண்ணப்பப்படிவங்களை சீர்செய்து புதிய விண்ணப்பப்படிவங்களை தயாரித்துள்ளோம். ஒருபயிற்சி நெறிக்கு மட்டும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதென நினைத்து பலர் விண்ணப்பிக்காமல் உள்ளனர்.

எனவே இதுவரை விண்ணப்பிக்காதோர் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் குறித்த திருத்தம் செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்படுவதால் அங்கு வந்து உடனடியாக பெற்று விண்ணப்பிக்க முடியும் என தெரிவித்தார். (செ-9)

# பாரத லக்ஷ்மன் உள்ளிட்ட நால்வரின் கொலை குறித்த விசாரணை நிறைவு

(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட நால்வரின் கொலை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்றுடன் நிறைவு செய்யப்பட்டது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

ஷிராண் குணரட்ன, பத்மினி என் ரணவக்க, என்.சி.பி.சி. மொராயஸ் ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்றது.

எதிர்வரும் செப்டம்பர் 8 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் அறிவித்துள்ளது.

இதன்போது பிரதிவாதியான துமிந்த சில்வா, சிகிச்சைகளுக்காக வெளிநாடு செல்வதற்கு நீதிபதிகளின் அனுமதியைக் கோரியிருந்தார்.

அதற்கான விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால், அந்த வேண்டுகோளை நிராகரிப்பதாக நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளதுடன், அனைத்து பிரதிவாதிகள் மற்றும் மனுதாரர்கள் சார்பாக எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைக்க முடியும் என மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் மேலும் அறிவித்துள்ளது. (செ-11)

# மரை இறைச்சியுடன் மூவர் கைது



(வவுனியா)

வவுனியா கள்ளிக்குளம் காட்டுப்பகுதியில் 85 கிலோ கிராம் மரை இறைச்சி வைத்திருந்த மூன்று பேரை விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

அத்தோடு சந்தேக நபர்கள் பயன்படுத்திய தாக சந்தேகிக்கப்படும் இரண்டு மோட்டார் சைக்கிலும் விசேட அதிரடிப்படையினரால் கைபற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் மரை இறைச்சி உள்ளிட்டவைகள் விசேட அதிரடிப்படையினரால் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளினால் சந்தேக நபர்கள் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-250)


## ஏலவிற்பனை

யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் வருடாந்தக் கணக்கெடுப்பு நடைபெற்று 15.07.2016 இன்று 11.00 மணிக்கு ஏலம் விடப்படும் என அறியத் தருகின்றேன்.

அதிபர்
யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்
கதிரிப்பாய், அச்சுவேலி. (5221)

## ஏலவிற்பனை

நூலகப்பாவனையிலிருந்து கழிக்கப்பட்ட புத்தகங்கள் - 38, பயன்பாட்டிலிருந்து கழிக்கப்பட்ட கிறீன்போர்ட் - 01 ஆகியவை எதிர்வரும் 27.07.2016 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலை வளாகத்தில் ஏலம் விடப்படவுள்ளது.

அதிபர்
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் (5223)

## பணியாளர் வேண்டுகை

மேற்படி கம்பனியினர் ஆகிய நாங்கள் வியாபாரத்துறையில் ஆர்வமுள்ள பணியாளர்களிடமிருந்தும் கணணித்துறையில் முழுமையாக பூர்த்தி செய்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி 15.07.2016 - 28.07.2016 வரை ஆகும். தகுதி உடையவர்கள் O/L, A/L பாடங்களில் சாதாரண சித்தி அடைந்தவர்களும் வியாபார துறையில் ஒருவருட கால அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு :- மேற்படி தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். நேர்முகத்தேர்வு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் நடைபெறும். சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :- 0214927607 / 0773027045 / 0768268926

GREEN VISION LANKA
JAFFNA (5219)


## பொருளாதாரம் 5.5 வீத வளர்ச்சி

(கொழும்பு)

முதல்காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு மற்றும்சர்வதேச சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றத்தை வெளிப்பபடுத்துவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டில் இதே காலப்பகுதியில் 4.4 வீதமாக இருந்த பொருளாதாரம் 2016 இல் குறித்த வளர்ச்சியை கொண்டுள்ளது.

நிதி அமைச்சினால் கடந்த மாதம் 30ஆம்திகதிவெளியிடப்பட்ட காலாண்டு நிதிக்கூற்றில் பொருளாதாரவளர்ச்சி குறித்து பதிவிடப்பட்டுள்ளது. (செ-11)

# 15 வயது சிறுமி மீது வல்லுறவு; சந்தேக நபருக்கு மேலும் மறியல்

(மல்லாவி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மித்த பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞரை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது,

கிளிநொச்சி கரடிப் போக்குசந்திக்கு அண்மித்த பகுதியில் உள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் 15 வயதுடைய சிறுமியொருவரை குறித்த விடுதிக்கு கொண்டு சென்று பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியிருந்ததாக பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து குறித்தசம்பவத்துடன் தொடர்புபட்டார் எனும் சந்தேகத்தில் குறித்த விடுதியில் தங்கியிருந்த இளைஞரை கைது செய்து கடந்த மாதம் 14ம் திகதி மன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து இளைஞரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் மூன்றாவது தடவையாக குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞரை நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இளைஞரை எதிர்வரும் 27ம் திகதி வரையும் மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (செ-15)

# அரசாங்கம் பிச்சைக்காரன் முகத்தில் பவுடர் பூசியுள்ளது

## பந்துல குணவர்த்தன விசனம்

அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையானது பிச்சைக்காரனின் முகத்தில் பவுடர் பூசுவதற்கு இணையானது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி திருத்தம் மூலம் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமையை தற்காலிகமாக திரும்பப் பெற்று சில பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கத்திற்கு நேர்ந்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கே இதற்குக் காரணம்.

சில பொருட்களின் விலைகளை மாத்திரம் குறைத்து அல்லது விலைகளை கட்டுப்படுத்தியதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பெறுமதி சேர் வரி திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் பொருட்களின் விலையேற்றத்தை தவிர்க்க முடியாது. 141 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி தற்போது 148 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதனால், ரூபாவின் மதிப்பு குறைந்துள்ளது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (இ-10)




# புகையிலை பொருட்களுக்கான வரியை ௯0 சதவீதத்தால் உயர்த்தத் தீர்மானம்

## சுகாதார அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

**புகையிலை பொதியை வெள்ளை நிறத்தில் கவர்ச்சிகரமற்றதாக அமைக்கவும், புகையிலை உற்பத்தி பொருட்களுக்கான வரியை 90 சதவீதத்தினால் உயர்த்தவும் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

தகவல் திணைக்களத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இலவசமாக இரத்த பரிசோதனைகளை செய்து கொள்ளவும் யோசனை முன்னெடுகப்பட்டுள்ளதாகவும், ஔடத மருந்து விலை அறிக்கை 2 மாதத்திற்குள் சமர்ப்பிகப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், இந்த திட்டத்தின மூலமாக தரமான மருந்துகளை கொள்வனவு செய்யவும், மருந்து செலவீனங்கள, பயனற்ற மருந்துபாவனை மற்றும் மருந்துகள் காலாவதியாதல் போன்றவற்றினையும் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க புதிய மென்பொருள் செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படும்.

இதேவேளை நாட்டில் சுகாதாரத்தினை வலியுறுத்தும் பொருட்டு குளிர்பானம் மற்றும் உணவுப் பொருட்களில் உள்ளடக்கப்படும் சீனி, உப்பு போன்றவற்றின் தன்மைக்கேற்ப அவற்றின் விலைகளில் வரிகள் அதிகரிக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-10)

# கோணேஸ்வரத்தில் நிஷா



அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை நேற்று முற்பகல் 9.45 மணியளவில் திருக்கோணேஸ்வரம் கோயிலுக்கு அவர் சென்றுள்ளார்.

இதன்போது திருக்கோணேஸ்வரம் கோயிலின் சிறப்பு வழிபாடுகளில் நிஷா பிஸ்வால் கலந்துகொண்டுள்ளார்.

மேலும், இந்த வழிபாடுகளில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நாமல் ராஜபக்ஷவின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாகைகள்

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பாந்தோட்டை மாவட்டம் முழுவதும் பதாகைகளும், கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன.

இதேவேளை லுனுகம்வெகர, சூரியவெளி பிரதேசங்களில் தொங்கவிடப்பட்டிருந்த பதாகைகள், கறுப்பு கொடிகள் என்பன குறித்த பிரதேசத்தின் பிரபல அமைச்சரின் ஆதரவாளர்களால் தீ வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பதாகைகளை தொங்கவிட வந்த நபர்களையும் அமைச்சரின் ஆதரவாளர்கள்தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)




# காலணியில் மறைத்து தங்க பிஸ்கட் கடத்தியவர் கட்டுநாயக்கவில் கைது

சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை காலணியில் மறைத்து வைத்து இந்தியாவிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குறித்த நபரை சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கண்டி கடுகஸ்தோட்டையைச் சேர்ந்த 48 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு சொநதமான யூ.எல் 141 ரக விமானத்தில் மும்பை நோக்கிப் பயணிக்க இந்த நபர் முயற்சித்துள்ளார்.

சந்தேகநபர் அணிந்திருந்த காலணிகளை கழற்றி சோதனையிட்ட போது காலணியின் அடிப் பகுதியில் நுட்பமான முறையில் தலா மூன்று தங்க பிஸ்கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. (இ-10)

# யாழ். பல்கலை. ஊழியர் சங்கத்தினர் வேலை நிறுத்தத்துடன் ஆர்ப்பாட்டம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்றையதினம் வேலைநிறுத்தப் போராட்டமும் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

நாடுமுழுவதிலுமுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கலவி நிறுவனங்களில் உள்ள போதனை சாரா ஊழியர்கள் நேற்றும் நேற்றுமுன் தினமும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் மாபெரும் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றதுடன் அதன் தொடர்ச்சியாக நேற்றையதினம் ஒவ்வொரு



பல்கலைக்கழகத்திலும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கங்களின் தொழிற்சங்கக் கூட்டுக்குழு சில கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருக்கு கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கடிதம் ஒன்றை வழங்கியிருந்தனர். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக மேற்குறித்த போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். (இ-9)

# சென்னை வந்தார் ரொனால்டினோ 'புட்சல்' கால்பந்து இன்று ஆரம்பம்

(சென்னை)

'புட்சல்' கால்பந்து லீக் தொடர் சென்னையில் இன்று ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்க இரு முறை 'பிபா' சிறந்த வீரர் விருது வென்ற பிரேசிலின் ரொனால்டினோ செனனை வந்தார்.

உள்ளரங்கு கால்பந்து போட்டி 'புட்சல்'. ஒரு அணியில் ஐந்து வீரர்கள் விளைய ாடுவர். தலா 20 நிமிடங்கள் கொண்டதாக நடக்கும். இதன் முதல் பிரிமியர் லீக் தொடர் இன்று முதல் வரும் 24 திகதி நடக்கவுள்ளது.

சென்னை, கோவாவில் போட்டிகள் நடக்கும் இத்தொடரில் சென்னை, மும்பை, கொல்கத்தா, கோவா, கொச்சிமற்றும்பெஙகளுர என, மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன.

போட்டி எப்படி:

இந்த அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடக்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அ ணிகளுடன் இரு முறை மோதும். மொத்தம் 12 போட்டிகள் முடிவில், அரையிறுதி போட் டிகள் ஜுலை 23ல் நடக்கும். இறுதிப்போட்டி (ஜுலை 24) கோவாவில் நடக்கவுள்ளது. முதல் சுற்று லீக் போட்டிகள் சென்னையில் இன்று முதல் 3 நாட்களுக்கு நடக்கும்.

ரொனால்டினோ வருகை: இத்தொடரில் பங்கேற்க வேல்சின் ஓய்வு பெற்ற ரியான் ஜிக் ஸ், அர்ஜென்டினா அணியின் முன்னாள் வீரர் ஹெர்னன் கிரெஸ்போ என, பல சிறந்த வீரர்கள் பங்கேற்க உள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இந்தியன் பிரிமியர் லீக் கால்பந்து தொடரில் பங்கேற்க அழைக்கப்பட்ட பிரேசிலின முன்னாள் வீரர் ரொனால்டினோ, ஒருவழியாக இத்தொடரில கோவா அணிக்காக களமிறங்க உள்ளார். இவர் இன்று சென்னை வந்தடைந்தார். இதன் மூலம், சென்னையில் நடக்கவுள்ள போட்டிகளில இவரின் ஆட்டத்தை ரசிகர்கள் காணலாம். புட்சல் கால்பந்தின் 'பீலே' எனறு அழைக்கப்படும் பல்காவோவும், (கொலம் பியா) இதில் பங்கேற்பார்.

இந்தியா சார்பில் பராஸ் அப்துல், ரோகித் சுரேஷ் உள்ளிட்ட 40 பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடரின் தூதராக டெஸ்ட் அணித்தலைவர் ஹோலி நியமிக்கப்பட்டுள்ளார். தீராத சர்ச்சை: புட்சல் கால்பந்து தொடருக்கும், தங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. என, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு ('பிபா') அறிவித்தது. தவிர, இந்திய கால்பந்து சங்கமும் இத்தொடரை அங்கீகரிக்கவில்லை. இதனால்தொடர்எந்தளவுக்கு வெற்றி பெறும்என, பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.


போட்டிகள் சொனி ஈ.எஸ்.பி.என் தொலைக்காட்சியில் இன்று மாலை 6.30 மணி முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

எப்படி விளையாடுவது சிறிய அளவிலான மைதானத்தில் இரு அணியிலும் கோல் கீப்பர் உட்பட தலா 5 பேர் (மொத்தம் 10 பேர்) விளையாடுவது தான் புட்சல் (ஐவர் கால்பந்து).

எத்தனை பேரை வேண்டுமானாலும் மாற்று வீரராக களமிறக்கிக் கொள்ளலாம்.வழக்கமான கால்பந்தைவிட அளவுகுறைவாக, குறைந்தளவில 'பவுன்ஸ்' ஆகும் பந்து பயன்படுத்தப்படும். தலா 20 நிமிடங்கள் கொண்ட இரு பகுதிகளாக போட்டி நடக்கும். ஓய்வு நேரம் 15 நிமிடம். ஒரு அணியில் 12 பேர் வரை இருக்கலாம். அதேநேரம் களத்தில் 5 பேர் மட்டும தான் விளையாட முடியும்.

'ஜெலோ காட்,' 'ரெட் காட்' இதிலும உண்டு. 'ரெட் காட்' பெற்றால், 2 நிமிடம் அல்லது எதிரணி கோல் அடிக்கும் வரை களத்தை விட்டு வெளியே இருக்க வேண்டும். கோல் கீப்பர் 4 வினாடிக்கும் மேல் பந்தை கையில் வைத்திருக்கக் கூடாது. இவர் எதிரணி பகுதிக்குள் சென்றும் விளையாடலாம். போட்டி 'சமநிலை' ஆனால், கூடுதல் நேரம் அல்லது 'பெனால்டிஸ்' என, ஏதாவது ஒரு வகையில் முடிவு எட்டப்படும். ஜுலை 15 சென்னை-மும்பை, கோவா-கொல்கத்தா சென்னை, ஜுலை 16 மும்பை-கொச்சி, கொல்கதகா-பெங்களுர் சென்னை ஜுலை 17 கொச்சி-சென்னை, பெங்களுர-கோவா சென்னை

ஜுலை 19 கொல்கத்தா-கோவா, மும்பை சென்னை கோவா ஜுலை 20 பெங்களுர்-கொல்கத்தா , கொச்சி-மும்பை கோவா ஜுலை 21 கோவா-பெங்களுர், சென்னை-கொச்சி கோவா ஜுலை 23 அரையிறுதி ஜுலை 24 நிறைவு விழா, இறுதிப்போட்டிகள் மாலை 6.30 மணிகரு தொடங்கும், சொனி 'ஈ.எஸ்.பி.என், 'தொலைக்காட்சியில்' நேரடி ஒளிபரப்பாகும். ஜுலை 18, 22-ம் திகதிகள் ஓய்வு நாள். (க)






# மிஸ்பா உல் ஹக் சதம் பாகிஸ்தான் சிறப்பான ஆட்டம்

மிஸ்பா உல் ஹக்கின் பொறுப்பான உதவியுடன் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் நிறைவில் பாகிஸ்தான் அணி வலுவான நிலையில் உள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய துள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி லோட்ஸ் மைதானத்தில ஆரம்பமாகியது. நாணய சுழறசியில வென்ற பாகிஸ்தான் அணி கப்டன் மிஸ்பா-உல்-ஹக முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அதன்படி பாகிஸ்தான் அணியின் மொகமது ஹபீஸ், ஷான் மசூத் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். மசூத் 7 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். 29 பந்துகளை சந்தித்த அவர் 12 ஓவர் வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக்கொண்டார். அடுத்து வந்த அசார் அலி களம்

இறங்கினார். அவர்ரன்கள் அடிக்காவிட்டாலும், விக்கெட் இழக்காமல் பார்த்துக்கொண்டார். மறுமுனையில் விளையாடிய ஹபீஸ் 59 பந்தில் 8 பவுண்டரியுடன் 40 ரன்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார். ஹபீஸ் ஆட்டமிழந்தபோது பாகிஸ்தான் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 51ரன்கள் எடுத்திருந்தது. அடுத்து யூனிஸ்கான் களம் இறங்கினார். பாகிஸ்தான் அணி மதிய உணவு இடைவேளை வரை 2 விக்கெட் இழப்பிற்கு 76 ரன்கள் எடுத்திருந்தது. அசர் அலி 7 ரன்னுடனும், யூனிஸ் கான் 18 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொ டங்கியதும் அசார் அலி 7 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அவர் 49 பந் துகளை சந்தித்து இந்த ரன்களை சேர்த்தார். 4-வது விக்கெட்டுக்கு யூனிஸ்கான் உடன் கப்டன் மிஸ்பா உல் ஹக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று விளை யாடியது. இதனால் பாகிஸ்தானின் ஸ்கோர் 34.4 ஓவரில் 100-ஐ தொட்டது. நிலைத்து நின்று விளையாடிய யூனிஸ் கான் 33 ரன்கள் எடுத்த நிலையில் பிராட் பந்தில் ஆட்டம் இழந்தார். 4-வது விக்கெட்டுக்கு மிஸ்பா உடன் ஆசாத் ஷபிக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி முதல் நாள் மதிய தேநீர் இடைவேளை வரை விக்கெட்டை இழக்காமல் பார்த்துக்கொண்டது. பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 282 ரன்கள் சேர்த்துள்ளது. மிஸ்பா 110 ரன்னுடன ஆட்டமி ழககாமல் உளளார். ஆட்டம் இன்றாகும்(க)



# மலிங்க தயார்

முழங்கால் காயத்தால் அவதிப்பட்டு வரும் இலங்கை இருபது-20 அணியின் முன்னாள் தலைவர் மலிங்க பாகிஸ்தான் சூப்பர் லீக்கின் 2வது சீசனில் ஆடவுள்ளார். இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான மலிங்க காலில் செய்து கொண்ட அறுவை சிகிச்சை மூலம் ஏற்படும் தொடர் வலியால் அவதிப்பட்டு வருகிறார். இதனாலே இருபது-20 உலகக்கிண்ண தொடரின் போது தலைவர் பதவியில் இருந்து விலகியது மட்டுமல்லாமல், இருபது-20 உலகக்கிண்ண தொடரில் இருந்தும் விலகினார். அவர் தொடர்ந்து போட்டிகளில் இருந்து விலகி ஓய்வு பெற்று வரும் நிலையில், ஒகஸ்ட் மாதம் நடக்கவுள்ள 2-வது பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார். (க)



# 16 அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை; அதிக விலைக்கு விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள 16 அத்தியாவசியப் பொருட்களும் அதற்கான கட்டுப்பாட்டு விலைகளும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிலையில் குறித்த பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

16 அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட இருப்பதாக கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் டீ.எம்.கே.பீ தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள 16 அத்தியாவசியப் பொருட்களின் விபரங்கள் வருமாறு,

கோழி இறைச்சி (தோலுடன்) 410 ரூபா, கோழி இறைச்சி (தோல் இன்றி) 495 ரூபா, சிவப்பு பருப்பு - 169 ரூபா, சீனி ஒரு கிலோ கிராம் - 95 ரூபா, நெத்தலி (தாய்லாந்து) ஒரு கிலோ கிராம் - 495 ரூபா, நெத்தலி (டுபாய்) ஒரு கிலோகிராம் - 410 ரூபா, கடலை ஒரு கிலோ கிராம் - 260 ரூபா, பயறு ஒரு கிலோகிராம் - 220 ரூபா, டின் மீன் - 140 ரூபா, இறக்குமதி செய்யப்பட்ட முழு ஆடைப்பால் மா - 810 ரூபா, உள்நாட்டு முழு ஆடைப்பால் மா - 735 ரூபா, கோதுமைமா ஒரு கிலோகிராம் - 87 ரூபா, உருளைக்கிழங்கு (உள்நாடு) ஒரு கிலோகிராம் - 120 ரூபா, பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் - 78 ரூபா, காய்ந்த மிளகாய் ஒரு கிலோ கிராம் - 385 ரூபா, கருவாடு (கட்டா) ஒரு கிலோ கிராம் - 1100 ரூபா, கருவாடு (சால) ஒரு கிலோகிராம் - 425 ரூபா, மாசி ஒரு கிலோ கிராம் - 1500 ரூபா, சுஸ்ட ஜன் பால்மா - 1500 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# எந்தவொரு சமூகமும் பாதிக்கப்படாத வகையில் தீர்வுத் திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்

## அமைச்சர் றிசாத் வலியுறுத்து

(கொழும்பு)

**இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் எந்தவொரு சமூகமும் பாதிக்கப்படாத வகையில் தீர்வுத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலமாகவே நிரந்தர சமாதானத்தை பேணமுடியும் என கைத்தொழில், வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.**



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வாலை நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பில் அமெரிக்க உதவிச் செயலாளர் டொம் மலி நவ்ஸ்கியும் பங்கேற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கை இனப்பிரச்சினை காரணமாக முஸ்லிம் சமூகமும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது. இது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

1990களில் வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்னும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் மீள்குடியேற்றங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பில் சர்வதேசமும் அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை .

இந்தப் பிரச்சினைகளில் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன். நானும் ஓர் அகதியே. யுத்தத்தினால் வடமாகாண மக்கள் மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்திலும் மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இதற்கான தீர்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும் போன்ற கருத்துகளையும் அமைச்சர் றிசாத் பதியுதீன் அமெரிக்க பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியிருந்தார். (இ-10)

# துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்திற்கு பாரிய சிக்கல்!

(கொழும்பு)

துறைமுக அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுத்து செல்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அபிவிருத்தி பணிகளுக்கு நீர் மற்றும் மின்சாரம் பெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை தொடர்பில், துறைமுக அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுத்து வரும் சீன நிறுவனம் இலங்கை அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்விலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துறைமுக நகர அபிவிருத்தி தொடர்பில் திட்டமிடப்பட்ட காலம் முதல் அது முடிவடையும் காலம் வரையில் சேரும் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

துறைமுக அபிவிருத்தி நிர்மாணப் பணிகளுக்காக கோரப்படும் மின்சார தேவையினை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த திட்டத்திற்காக தேவைப்படும் நீரினை பெறுவதற்காக களனி கங்கை மற்றும் களு கங்கையின் நீர் பெறும் சகல இடங்களிலும் தற்போது நீர் பெறுவதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, துறைமுக திட்டத்திற்கு அவசியமான குறித்த 3 சேவைகளையும் வழங்குவதற்கு மாற்றுத் திட்டம் தேவைப்படுவதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்குற்றச்சாட்டுகளினால் சீன அதிகாரிகளின் முன்னிலையில், இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# நடிகர் கமல்ஹாசன் வைத்தியசாலையில்

நடிகர் கமல்ஹாசன் சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடல் நலக்குறைவு காரணமாக உலக நாயகன் கமல்ஹாசன் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆழ்வார்பேட்டையில் அலுவலக மாடிப்படியிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு கமல் தவறி விழுந்ததில் பலத்த காயம் ஏற்பட்டது.

இவரை பரிசோதித்த வைத்தியர்கள், கால் மூட்டு மற்றும் முதுகு தண்டவட பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும், சிறிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் கூறினர்.

இதனை தொடர்ந்து அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது, இவர் குணமாக சில வாரங்கள் ஆகும் எனவும், அதுவரையிலும் ஓய்வு எடுக்கும்படியும் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (இ-10)


# அறுபதாம் அகவை வாழ்த்து



**திரு.வாரித்தம்பி சிவராசா**

**(பகுதித் தலைவர்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)**

சிவராசா என்பான் சீரிய பண்பாளன்
சிரித்த முகமுடையோன் சிகரமெனப் புகழ்பெற்றோன்
இந்துவை என்றும் நேசித்தாய் இனிமையாய் பழகுவாய்
எந்த வேளையும் நீதிக்காக குரல் கொடுப்பாய்

உயர்தரத்தில் தமிழதனில் நின் சிறப்புக் கண்டேன்
என்பணியில் உன் இணைவைத் துணையாகக் கண்டேன்
அரங்கை அதிரவைக்கும் ஆக்ரோஷமான உன் பேச்சு
ஆசிரியப் பணியே என்றும் உன் உயிர் மூச்சு.

அறுபது அகவை நாளதனில் நின் வாழ்வு
சிறக்க வாழ்த்துகின்றேன்.

**பொ.மகேஸ்வரன், ஓய்வுநிலை பிரதி அதிபர்,**
**யாழ்.இந்துக் கல்லூரி.**


# இராசி பலன்

**15.07.2016**
**(ஆனி 31, வெள்ளிக்கிழமை)**
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 2.22 மணிவரை
விசாகம் முற்பகல் 10.22 மணிவரை
சுபநேரம் 6.00-7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
சயன ஏகாதசி விரதம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி | | புத<br>சுக் |
| | | | குரு<br>ராகு |
| | சனி, சந்<br>செவ் | | |

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மேடம்:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும்.

**இடபம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை கூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்:** வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வியாபார விருத்தியுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியச் செலவுகள் கூடும்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணவரவு திருப்திதரும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புகள் உதவிசெய்ய முன்வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

# பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இராணுவத்தின் தலையீடு தேவை

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சில கடற்றொழில் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இராணுவத்தின் தலையீடு தேவை என வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமர்வு கடந்த 12 ஆம் திகதி கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.


இந்த அமர்வின் போது உறுப்பினர் து.ரவிகரனால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு கொழும்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கலந்து கொண்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் 1965 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சிங்களவர்களே கரைவலைப் பாடுகளின் முதலாளிகளாக இருந்தார்கள் எனவும் இவர்களுக்கு கீழே தமிழர்கள் தொழிலாளர்களாக இருந்தார்கள் எனவும் கூறியிருந்ததோடு சிங்களவர்களின் மீன்பிடியையும் நியாயப்படுத்தியிருந்தார்.

இதனை வடக்கு மாகாண சபையின் கவனத்திற்கு கொண்டுவந்த ரவிகரன், இராணுவக் கட்டளைத் தளபதி கூறியது பொய் எனவும் இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று ரீதியான சம்பவங்கள் தெரியும் என காட்டிக்கொண்டது மிகத் தவறானதாகும் எனவும் இவ்வாறு பொய் கூறும் ஒருவரை அதுவும் இராணுவத்தரப்பை எமது மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் குழுவில் இணைத்துக் கொண்டது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் உடனடியாக அந்த குழுவிலிருந்து அவரை நீக்குவதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரேரணை ஒன்றினை முன்மொழிந்தார்.

இந்த பிரேரணையை வழிமொழிந்த உறுப்பினர் க.சர்வேஸ்வரன், வடக்கில் எந்த சிவில் நடவடிக்கைகளிலும் இராணுவம் தலையீடு செய்யக்கூடாது என கோரி இந்த தீர்மானத்தை நிறைவேற்றலாம் என ஆலோசனை வழங்கினார். இதனை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, வடக்கில் நடைபெறும் எந்த சிவில் கூட்டங்களிலும் இராணுவம் தலையீடு செய்யக்கூடாது என பிரேரணையை நிறைவேற்றுவோம் எனக் கூறினார்.

இதன் போது எழுந்த மீன்பிடி அமைச்சர் டெனிஸ்வரன், அவ்வாறு தடைசெய்வது தவறு எனவும் இராணுவத்தினர் சில கூட்டங்களில் கலந்து கொள்வது அவசியம் எனவும் கடற்றொழில் சார்ந்த பிரச்சினைகளில் இராணுவத்தின் தலையீடு தேவை எனவும் ஏற்கனவே சில குழுக்களில் இராணுவத்தினரை இணைத்துக்கொண்டு உள்ளோம். ஆகையால் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்ற பிரேரணை நிறைவேற்றக் கூடாது என அமைச்சர் கூறினார்.

அமைச்சரது கருத்தால் ஆத்திரமடைந்த உறுப்பினர் சர்வேஸ்வரன் மீண்டும் எழுந்து இது பிழையான நடைமுறை. அதனை தான் கைவிடுமாறு கோருகின்றோம். இதனை மாற்றுங்கள், முன்பு நடைபெற்றது என்பதற்காக பிழையான நடைமுறையை தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டு இருக்க முடியாது என கூறினார். இந்த விவாதத்தை இடையில் தலையிட்டு முடிவுக்கு கொண்டுவந்த அவைத் தலைவர், உறுப்பினர் ரவிகரன் கொண்டு வந்தவாறே பிரேரணை நிறைவேற்றுவதாக அறிவித்தார். (இ-4)



பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கான புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான விசேட பூசை வழிபாடுகள் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற போது...



வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டபோது...



வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் தனது 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து குடிநீர் இயந்திரங்கள் இரண்டினை நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கையளித்துள்ளார்.

இதற்கான கையளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது நெல்லியடிப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பியந்தாவிடம் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

## சக்தி பிரசங்க நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் இளைஞர் கழகங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் துறுணு சிரமசக்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் துறுணு சக்தி பிரசங்க நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இணைப்பாளர் டி. தபேந்திரன் அறிவித்துள்ளார்.

தேசிய கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் இளைஞர் கழகங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய தேவைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறும் நோக்குடன் ஆயிரத்து 500 வேலைத் திட்டங்களை செயற்படுத்தவுள்ளது.

இவ் வேலைத்திட்டத்துடன் இணைந்த இளைஞர்களின் YOUTH GOT TALENT இனை இனம்கண்டு அவர்களுக்கு தேசிய மட்டத்தில் பரிசளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் முதலாம் பரிசாக 4 மில்லியன் ரூபாயும் ஏனைய 10 வெற்றியாளர்களுக்கு வெகுமதியான பணப்பரிசிலும் வழங்கப்படும். இவற்றிற்கான விண்ணப்ப முடிவுதிகதி 27.07.2016 ஆகும். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தலைமை மூலம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் பிரதேச செயலக ரீதியாக 25 அபிவிருத்தி செயற்றிட்ட முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

அம் முன்மொழிவு அபிவிருத்தித் திட்டங்கள் பிரதேச செயலாளரை தலைமையாக கொண்ட குழுவினால் பரிசீலிக்கப்பட்டு 05 செயற்றிட்டங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இச் செயற்றிட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 75 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அந்த நிதியுடன் திட்டத்தை செயற்படுத்தவுள்ள இளைஞர் கழகம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியினை வேறு அமைப்புக்கள் மூலம் அல்லது சிரமசக்தி மூலம் பெற்றுக்கொண்டு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள திட்டத்தினை நிறைவு செய்தல் வேண்டும்..

நிறைவு செய்த செயற்றிட்டங்களில் மாவட்ட மட்டங்களில் 03 சிறந்த செயற்றிட்டங்கள் மாகாண மட்ட போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மாகாண மட்டத்தில் சிறந்த அபிவிருத்தி திட்டம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படும்.

அதில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொள்ளும் சிறந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு 10 மில்லியன் ரூபா பரிசாக வழங்கப்படுவதுடன் ஏனைய மாகாண ரீதியில் வெற்றியீட்டிய செயற்றிட்டத்திற்கு தலா ஒரு மில்லியன் ரூபா பரிசாக வழங்கப்படும்.

இவ் வேலைத்திட்டம் தொடர்பான தெரிவு செய்யும் நிகழ்வு, ஆரம்ப நிகழ்வு, இறுதி நிகழ்வு என்பன தொலைக்காட்சி நிறுவனமான ITN மற்றும் வசந்தம் T.V ஆகியவற்றில் ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வேலைத்திட்டமானது ஓகஸ்ட் மாதம்தொடக்கம்செப்டெம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கான சுவரொட்டிகள் அந்தந்த பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களை அறிவதற்கு இல. 28 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி எனும் முகவரியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகம் மற்றும் அலுவலக தொலைபேசி இலக்கங்கள் மூலம்(021 222 2526) அறிந்துகொள்ளலாம்.

மேலும் தங்கள் பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகளை தொடர்பு கொண்டும் இதற்கான விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## நெல்லியடி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா 17 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)


யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா - 2016 நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி அரங்கில் பாடசாலை அதிபர் ஜி. கிருஷ்ண குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ். சேதுராஜா கலந்துகொள்வதுடன் யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. கௌரி சேதுராஜா பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (இ



கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் சிறுவர் பாராளுமன்றத்தின் இந்து கலாசார அமைச்சர் செல்வி தரங்கிணி சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# சாம்பல்தீவு விகாரையில் வழிபட நீதிமன்றம் தடை



(கொழும்பு)

**சாம்பல்தீவு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரையில் வழிபாடு செய்ய நீதிமன்றம் தடை விதித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்னம் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை இந்த பௌத்த விகாரை தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக துரைரத்னம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டமான திருகோணமலையில் குறித்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் காத்து வந்த நிலையில் இந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இதுவரையிலும் எவ்வித நன்மைகளையும் செய்யவில்லை.

எனினும், இப்பௌத்த விகாரை அமைப்பதில் அரசாங்கத்திற்கு நேரடி தொடர்பு எதுவும் கிடையாது. மாறாக இது ஒரு சிலரின் திட்டமிட்ட செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த விகாரையில் வழிபாடு செய்ய வேண்டாம் என நீதிமன்றம் கடுமையாக உத்தரவு பிறப்பித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## விமல் எம்.பி. 55 வாகனங்களை ராவணா பலயவுக்கு கொடுத்தார்

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, அமைச்சராக இருந்தபோது பொறியியல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 55 வாகனங்களை, ராவணா பலயவுக்குக் கொடுத்து 690 இலட்சம் ரூபாய்க்கு மேலதிகமான பணத்தை வீணடித்துள்ளார்.

ராவணா பலய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரிடம் பாரிய நிதிமோசடி ஜனாதிபதி விசாரணைப்பிரிவில், நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கண்ட விசாரணை மூலம்இது தெரிய வந்துள்ளது.

இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில்அவர், இரண்டுமணிநேரம் வாக்குமூலமளித்துள்ளார்.

2010 ஆம்ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலும்அவ்வப்போது இந்த வாகனங்கள், ராவணா பலயவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான வாடகை, எரிபொருள், சாரதிக்கான சமபளம் ஆகியன பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவே கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.(இ-10)

### தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-20

(14.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

பகுதி II

01. 1.காலைக்காட்சி 2.இரவு 3 .சக்கரம்போல 4.கிழக்கு
5.செக்கச்சிவந்த 6.கோழி, கொக்கு 7.இருள்
02. 1.அவரவர்க்கு தனக்குரியன உயர்வானவை 2.தீமையை வளர்த்தல்
03. 1.கவிதாவும் பாத்திமாவும் சந்தைக்கு சென்றார்கள்.
04. 1.ஒளிக்கீற்று
2.கல்லூரி
05. 1.பந்தி 2.சிலேடை
06. 1.சேவல்கள் அதிகாலையில் கூவின
2.தம்பி நேரத்தோடு பாடசாலைக்கு சென்றான்
07. 1.பெயர் 2.தொலைபேசி
08. Rabbit
Morning
09. Pleace close the gate
10. 1.தயவு செய்து அங்கே நிறுத்தவும்
2.நான் வெளியே போகின்றேன்
3.நான் மெதுவாக வேலை செய்வேன்
11. 1.சுது பாட
2.உங்களுடைய ஊர் எங்கே?
3.தாத்தா தண்ணீர் குடியுங்கள்

12) 1 13) 1 14)3 15)4 16)4 17)1 18)1 19)3 20)4
21)2 22)4 23)1 24)3 25)2 26)4 27)1 28)3 29)3
30)4 31)2 32)1 33)2012,2112,2212,2312 34)278 கொப்பி
35)3/8 36)கணவுரு 37)1l 750ml 38) 34m 25cm
39)300/- 40)4 மாதங்கள் 41)8874,8006,5068,2489
42)85 43)3/10 44)12cm
45)எழுவாய், பயனிலையுடன் கருத்துள்ள 3 வாக்கியம் எழுதுக.


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:20செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6080

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 50சூரிசெவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L/பிரான்ஸ் PR
தொ.இ: B/6081

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 62செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/6083

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 50செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/சுவிஸ் PR
தொ.இ: B/6084

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 72
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5748

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 31
உயரம்: 160cm
தகைமை/தொழில்:வங்கியியல்/அரசதொழில்
தொ.இ: G/5754

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 63செவ் 4 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:HNDIT
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/5756

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 53
உயரம்: 157cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/5761

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 222 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# பூநகரி மண்டைக்கல்லாறு பாலம் திருத்தப்பட்டு போக்குவரத்தை இலகுபடுத்துவது எப்போது?



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி ஏ-32 பிரதான வீதியில் காணப்படும் மண்டைக் கல்லாறு பாலம் நீண்டகாலமாகத் திருத் தியமைக்கப்படாது படுமோசமாகப் சேதம டைந்து காணப்படுகின்றமையால் அப்பகு தியால் தினமும் ஆயிரக்கணக்கான வாக னங்களில் பயணிக்கும் பெருமளவான பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இப்பாலத்தை உடனடியாகவே மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்றவகையில் திருத்தியமைப்பதாக கிளிநொச்சி மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூறிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் காலங்கடந்த நிலை யிலும் பாலத்தைத் தற்காலிகமாகவேனும் உடனடியாகத் திருத்தியமைக்க நடவடி க்கைகள் எதுவும் மேற்கொள்ளாது பொறு ப்பற்ற விதத்தில் பாராமுகமாக இருப்பதாக மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் பூநகரி மண்டைக்கல்லாற்றுப் பாலத்தைப் புனர மைப்பதாக அறிவித்து தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களால் திருத்த வேலை க்கான முன்னாயத்த வேலைகள் நடைபெற்ற நிலையில் ஆட்சி மாறியதன் பின்னர் அந்த ஒப்பந்தகாரர்கள் மேற்படி பாலத்தைத் திருத்தியமைக்காது சென்றதாகக் கூறப்படு கின்றது.

மழை காலங்களில் ஏ-32 வீதியின் மண்டைக்கல்லாறுப் பாலத்தினை மேவி நீர் பாய்வதனால் இவ்வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு படகு மூலம் பயணிக்க வேண்டிய இக்கட்டான நிலைக் குள்ளாகின்றார்கள் பயணிகள்.

இப்பாலத்தினூடாகவே முழங்காவில் ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை போன்றவற்றுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் நோயாளர்கள் கொண்டு செல்லப்படுகின்றார்கள்.

இப்பாலம் திருத்தியமைக்கப்படாத மையால் சிரமங்களையே எதிர்நோக்குகின் றார்கள்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதி காரசபையின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தெரிவித்தபடி பெருமளவான பயணிகள் போக்குவரத்துச் செய்யும் ஆபத்து நிறைந்த மண்டைக்கல்லாறு பாலத்தை தற்காலிக மாகவேனும் திருத்தியக்க வேண்டும்.

மண்டைக் கல்லாறுப் பாலத்தைச் நேற்று முன்தினம் சென்று நேரடியாகப் பார்வை யிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இப்பாலம் இதுவரை புனரமைக் கப்படாதமை தொடர்பில் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றதுடன் இப்பாலத்தை உடனடியாகவே திருத்தியமைத்து மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு உதவுமாறும் உரியவர்களிடம் கூறினார்.

இப்பாலத்தை விரைவாகப் புனரமைத்து மக்கள் போக்குவரத்துச் செய்ய வீதி அபி விருத்தி அதிகாரசபையின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உதவவேண்டும் என பொது மக்கள், பயணிகள்,சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)




# மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் சங்கிலி அறுப்பு

## பெண்ணின் சாதுரியத்தால் கீழே விழுந்த தொலைபேசி காட்டிக்கொடுத்தது

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாத நபர்கள் வீட்டு வாசலில் நின்ற பெண் ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றனர்.இச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி திருவையாறு 2ஆம் பகுதியில் இடம் பெற் றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரு ம்பிய பிரஸ்தாபப் பெண் வீட்டு வாசலில் நின் றுள்ளார்.

இதன்போது அவ் வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அக்கா என பெயர் சொல்லி அழைத்துவிட்டு பெண்ணின் கழு த்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்து செல்ல முற்பட்டனர்.

பெண் சாதுரியமாகச் செயற்பட்டதை அடு த்து மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த நபர் பிடித்து இழுக்கப்பட்டதில் கீழே விழுந்தார்.

இதனையடுத்து அவரது கைத்தொலை பேசியும் கீழே விழுந்தது.

உடனடியாக கைத்தொலைபேசியை வேகமாக அப்பெண் எடுத்ததுடன் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும் குறித்துக் கொண் டார்.

இந் நிலையில் அவர்கள் தங்கச் சங்கி லியை அறுத்துத் தப்பிச் சென்றனர்.

இளைஞர்களின் உதவியுடன் இவர்கள் இருவரும் பாரதிபுரத்தில் வைத்து அடை யாளம் காணப்பட்டனர்.

இதன் பின்னர் கிளிநொச்சி பொலிஸா ருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸாரின் விரைவான நடவடிக்கையி னால் இரு நபர்களும் கைது செய்யப்பட்டு தற்போது கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-271)

# புதுவிளான்குளத்தைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் தரிசு நிலங்களையும் விவசாயத்துக்கு பயன்படுத்தலாம்

## விவசாயிகள் கோரிக்கை

வவுனியா, புதுவிளான் குளத்தினை புனரமைத்து சிறுபோக பயிர்ச்செய்கைக்கு உதவி செய்து தருமாறு அப்பகுதி விவ சாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

யுத்தத்தால் கடுமையாகப் பாதிப்படைந்த வவுனியா வடக்கு, மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட புதுவிளான்குளம் குளத்தின் கீழ் சுமார் 200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களும் காணப் படுகின்றது. 2005 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் இக்குளம் புனரமைக்கப் பட்டிருந்தது. காட்டு யானைகள், மழை போன்றவற்றினால் குளக்கட்டுப் பகுதிகள் சேதமடைந்த நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றிருந்தன. ஒப்பந்தக்காரர் சீராக வேலை செய்யா மையால் தற்போது அதிக நீரை தேக்க வைக்க முடியவில்லை என்பதுடன் குளத் தின் வான்பகுதி, கட்டுப்பகுதி என்பனவும் மீண்டும் புனரமைக்கப்பட வேண்டிய நிலை யில் காணப்படுவதாக விவசாயிகள் சுட்டி க்காட்டுகின்றனர்.

இதனால் 150 ஏக்கரில் பெரும்போகமும், 50 ஏக்கரில் சிறுபோகமும் செய்யக் கூடிய தாகவே தற்போது உள்ளது. இதனைப் புன ரமைத்தால் தரிசு நிலமாக உள்ள நிலப்ப குதிகளையும் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும் என இக் கிராம விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2-250)

# முள்ளியவளை கமநலசேவை நிலையத்தில் விவசாயக்காணிகளைப் பதிவு செய்க

## விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை கமநல சேவை நிலை யத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள விவசாயக் காணிகள் அனைத்தினையும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது கிராமம் கிராம மாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக முள்ளிய வளை கமநல சேவை நிலையத்தின் விவ சாய அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுக ந்தன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிராமங்களில் பதிவு செய்யத்தவறிய வர்களின் பதிவுகள் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள் ளார்.

எனவே பதிவு செய்யத் தவறிய அனைத்து விவசாயிகளையும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ளுமாறு முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் விவசாய அபிவிருத்தி உத் தியோகத்தர் கேட்டுள்ளார். இந்தப் பதிவு களின் அடிப்படையிலேயே எதிர் காலத்தில் விவசாய மானியங்கள் ,ஏனைய உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-302)



தலைமன்னார் படப்படிகிராம உதயம் கைப்பணி அபிவிருத்தி சங்க கட்டட திறப்புவிழா அண்மையில் நடைபெற்ற போது...
(படங்கள்:-அராலி செய்தியாளர்)

# சரணடைந்தோரின் விபரங்களை கேட்டால் புனர்வாழ்வு பெற்றோர் விபரம் சமர்ப்பிப்பு

## ஆவணத்தை ஏற்கமறுத்தது முல்லை.நீதிமன்றம்

(பனிக்கன்குளம்)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போகச் செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் உள்ளிட்ட 12 பேரின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் இறுதி யுத்தத்தில் சரணடைந்த போது பெறப்பட்ட ஆவணம் இல்லையென கோரி வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இறுதிக் கட்டயுத்தத்தின் போது சரணடைந்தவர்கள் தொடர்பான விபரங்கள் தம்மிடம் இருப்பதாக இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி தெரிவித்த நிலையில் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும் இதற்கு முன்னர் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி மற்றும் இராணுவத்தினர் நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில் நேற்றைய தினத்திற்கு வழக்கை ஒத்திவைத்த நீதவான், நேற்றைய தினம் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியலையும் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி இன்றும் (நேற்றும்) நீதிமன்றில் முன்னிலையாக தவறினால் பிடியாணை பிறப்பிக்கப்படும் எனவும் நீதிபதி எச்சரித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சார்பில் அவரது மனைவியான வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன், கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பால. நந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா ஆகியோரே இந்த ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருக்கின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதியில் வவுனியா மேல் நீதிமன்றில் இந்த ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் மேலும் ஏழு ஆட்கொணர்வு மனுக்கள் இதனுடன் இணைக்கப்பட்டன. இதற்கமையவே 12 பேரினது ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் இறுதியுத்தத்தில் சரணடைந்த போது பெறப்பட்ட ஆவணம் இல்லையென கோரி வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணை தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் ஆயரான சட்டத்தரணி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இராணுவத்தரப்பு சாட்சியான 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தன என்பவர் குறுக்கு விசாரணையின் போது யுத்தத்தின் இறுதி நாட்களான மே மாதம் 17, 18,19 ஆகிய திகதிகளில் இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர் பட்டியல் தம்மிடம் இருப்பதாக திட்டவட்டமாக பதிலளித்திருந்தார்.

அதனடிப்படையில் தான் குறிப்பிட்ட மனுதாரர்கள் காணாமற்போனார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்தார். இதனடிப்படையில் நான் நீதிமன்றில் செய்த விண்ணப்பத்திற்கு அமைய நீதிமன்றம் சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியல் அடங்கிய ஆவணத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து இரண்டு தவணைகளுக்கு மன்றில் இவர்கள் ஆஜராகவில்லை. அதன்பின்னர் நேற்றையதினம் ஐந்து மாதங்களின் பின்னர் எடுக்கப்பட்ட போது சாட்சியிடம் குறிப்பிட்ட ஆவணத்தை கொண்டு வந்ததா என கேட்கப்பட்டது. அதற்கு அவர் ஒரு ஆயிரம் பக்கங்கள் அடங்கிய நேர்த்தியாக செய்யப்பட்ட ஆவணத்தை காட்டினார்.

அதில் புனர்வாழ்வு பெற்றோரின் . பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சரணடைந்த திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அந்த ஆவணம் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட ஆவணம். எனவே நான் மன்றில் விண்ணப்பம் செய்தேன். இந்த ஆவணம் இராணுவ பொறுப்பிலிருந்த ஆவணமல்ல. இது புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட ஆவணம் இதன் ஒரு பிரதியை உத்தியோகபூர்வமாக யாரும் பெற்றுக் கொள்ள முடியும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்தேன். அந்த ஆவணம் கூட ஒரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமே தவிர மூல பிரதியல்ல. எனவே இந்த ஆவணத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என கேட்டுக் கொள்ளப்பட்டதன் பேரில் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

அதாவது இது ஒன்று தான் இருக்கிறது, அப்போது அவர் அந்த தருணத்தில் அழிக்கப்பட்ட பதில், அதற்கு என்ன நடந்தது, அவர் அந்த விபரங்கள் தம்மிடம் இருக் கிறது என்று கூறினார். இப்போது ஐந்து மாதத்தின் பின்னர் நீதிமன்றத்தில் அது தொடர்பான ஆவணம் இல்லை என்கிறார்.


அவர் இன்று (நேற்று) சமர்ப்பித்த ஆவ ணம் கடந்த 2009 ஆம் ஆண்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை யானவர்கள். குறிப்பாக கடந்த ஏழு ஆண்டுகளாக புனர்வாழ்வளிக்கப் பட்டு விடுதலையானவர்களின் விபரம் அடங்கிய ஆவணமாக காணப்படுகின்றது.

இதில் காணாமற்போனவர்களின் விபரங்கள் இல்லை. இவர்கள் எவ்வாறு மே மாதம் 17,18,19 இல் சரணடைந்தவர்களின் பெயர் இல்லையென எந்த ஆவணத்தை வைத்து கூறினார் என்று கேட்டதற்கு மழுப்பலான பதிலளித்தார்.

அத்துடன் இறுதியாக மனுதாரர் சார்பாக நான் செய்த வேண்டுகோளுக்கிணங்க இது பொருத்தமற்ற ஆவணம். எனவே அன்று அவர் கூறிய விபரமடங்கிய ஆவணத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். அத்தோடு அதில் இரண்டாவது மனுதாரரான இராணுவத்தளபதியிடம் தொடர்பு கொண்டு அவருடைய பிரதிநிதி ஒருவரை நீதிமன்றுக்கு அனுப்பி அது தொடர்பான விபரங்களை அப்படியொரு ஆவணத்தை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதோடு வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றார். (2-281)







இரணைமடுக் குளத்தின் கரையில் எழுந்தருளி இருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்திற்கான 99 அடி உயரமும் 52 அடி நீளமும் 36 அடி அகலத்தை கொண்டு நவதளங்களுடன் கூடிய இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுக்காலை நடைபெற்றது. விசேட வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அடிக்கல் நாட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர் எஸ்.சுதாகரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், உத்தியோகத்தர்கள், குருக்கள், பக்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைத்தனர். இக்கோபுரம் அமைப்பதற்கு ஆறு கோடி ரூபா செலவாகுமெனவும் இரண்டு வருடங்களுக்குள் கட்டி முடிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

## எருக்கலம்பிட்டி கடற்கரையில் அமையப்பெற்ற இறால் பண்ணையால் மீனவர்கள் பாதிப்பு

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எருக்கலம்பிட்டி கடற்கரைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணையினால் தாம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த இறால் பண்ணையை அகற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மீனவர்கள் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

எருக்கலம்பிட்டி கல்லடிப்பகுதியூடாக மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த நிலையில், கடலேறியை குறுக்காக மறித்து சுமார் 3 கிலோ மீற்றர் வரையான பகுதியில் இறால் பண்ணையொன்று அமைக்கப்பட்டது. இந்த இறால் பண்ணையை அமைப்பதற்காக பாரிய மண் அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளமையால், அப்பகுதியில் கடல் நீர் வற்றிய நிலையிலேயே காணப்படுகின்றது.

அதனை அகற்றுமாறு பலமுறை அதிகாரிகளிடம் கோரிக்கைகளை முன்வைத்தும் குறித்த பண்ணை அகற்றப்படவில்லை என்று மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சுமார் 400 மீனவ குடும்பங்கள் கடற்றொழிலில் ஈடுபடும் குறித்த பகுதி அடைக்கப்பட்டு இறால் பண்ணையாக மாற்றப்பட்டுள்ளமையினால் குறித்த மீனவ குடும்பங்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மன்னார் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.மெராண்டவிடம் வினவிய போது,

மீனவர்களின் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த இறால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இறால் பண்ணையொன்றை அமைக்க வேண்டும் என்றால் அதற்கு கடற்றொழில் திணைக்களத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அந்த அனுமதி கூட பெற்றுக்கொள்ளாத நிலையிலேயே இந்த இறால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (2)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.11.1951 மறைவு 15.07.2014

அமரர் குருசாமி ஜெயமணி

அன்பின் திருவுருவமாய்
எமக்கு
வழிகாட்டியாய் இருந்து
எம்மை வளர்த்தெடுத்து
வாழ்வித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
அம்மா
பாசம் நிறைந்த உங்கள்
நினைவுகள்
ஓராண்டுகடந்திட்ட போதிலும்
எம்மனங்களை விட்டு
அகலாது
உங்கள் பிரிவை மறப்பதற்கு
முயற்சித்தோம்
எம்மால் அது
முடியவில்லைத்தாயே...
உங்கள் ஆத்மா சாந்தி
யடைய எல்லாம் வல்ல
ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மொற்பதி,
குடத்தனை.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள்.

சி-5192

### எண்ணெய் குழாயினால் மக்களுக்கு பாதிப்பில்லை

கொழும்பு துறை முகத்திலிருந்து ஒரு கொடவத்த எண்ணெய் களஞ்சியசாலைக்கு எண்ணெய் கொண்டு செல்லப்படும் புதிய குழாய் திட்டத்தினால் பொது மக்களுக்குபாதிப்பு இல்லை என்று நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த பகுதி மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்த பிறகே குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் அப்புறப்படுத்தப்படு வர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்காமல் மக்களை அங்கிருந்து அப்பு றப்படுத்த நினைப்பது சிக் கலை தோற்றுவிக்கும் செயல் எனவும் அமைச்சர் சுட் டிக் காட்டியுள்ளார். (இ-10)

# செய்தித்துளிகள்

## மின்சாரம் தாக்கி குழந்தை மரணம்

சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த ஜேர்மன் நாட்டு குழந்தை, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வருடம் 10 மாதங்களான குழந்தையே உயிரி ழந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு பெற்றோர், இரவு உணவு உட்கொண்ட போது, குழந்தை நிலத்தில் விளையாடிக் கொண்டிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

நிலத்தில் கிடந்த, மின்சாரத்தை கடத்தும் பாதுகாப்பற்ற வயரை குழந்தை தொட்டதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகவும் அதனையடுத்து, வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்றதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (இ-10)

## உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணை பயிற்சி நெறி வகுப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வளவாளர்களாக வடபிராந்திய குடும்ப புனர் வாழ்வு நிறுவனத்தினர் வருகை தரவுள்ளனர். (இ-5-19)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தலைவர், மாவட்டச் செயலக பெறுகைகள் குழு சார்பில் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியின் கீழ் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உள்ளக வீதிகளை புனரமைப்பதற்காக, தகுதி மற்றும் தகைமை உடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றனர்.

1.கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.கேள்விதாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (CIDA), வீதி நிர்மாணிப்பிற்கு வழங்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினைக் கொண்ட சான்றிதழைக் கொண்டிருப்பதோடு, பொது நிதிச் சுற்றறிக்கை, இல 04/2016 ற்கு அமைவாக அவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 18.07.2016 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்கள் தேவைப்படின் யாழ்.மாவட்டச் செயலக மீள்குடியேற்றப் பிரிவின் 021 222 4029 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

4.விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 18.07.2016 முதல் 01.08.2016 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 2000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர்,பெறுகைக்குழு,மாவட்டச் செயலகம் , யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 02.08.2016 திகதியன்று பி.ப 2.30மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

6.காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 02.08.2016 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்

8.Prebid Meeting 26.07.2016 முற்பகல் 10.00 மணிக்கு மாவட்டசெயலகத்தில் நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | இடம் | மதிப்பீட்டுத் தொகை (Rs in mn) | தேவையான தராதரம் (CIDA) | கேள்விப்பிணைவிபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடி யாகும் காலம் | |
| 1 | JF/RES/INFRAS/ROAD/2016 | வீதி திருத்தம் | தெல்லிப்பளை | 14.25 | C6 | Rs 142,500.00 | 90 நாட்கள் | 60 நாட்கள் |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-5189)

## அறநெறிப் பாடசாலையின் 18 ஆவது ஆண்டு நிறைவு

சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் விசு.க.விமலன் (சங்கர்) ஞாப கார்த்த விசேட வருடாந்த விழாவும் பரிசு தினம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம்பெறும். பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அருளா சியுரையினை பொன்னாலை பிள்ளையார் ஆலய பூசகர் சிவஸ்ரீ தி.பொன்னம்பலவாணர் வழங்குவார். இதில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் சி.யமுனாநந்தா, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக இந்து சமய கலாசார உத்தியோகத்தர் சு.உதய பாலனும் கலந்து கொள்ளவுள்ளனர். முதற்பிரதியினை கு.வி.கந்தசாமி பெற்றுக் கொள்வார். (இ

## ஊடகவியலாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி யாழில்

(யாழ்ப்பாணம்)

சொண்ட், அக்ரெட், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன இணைந்து ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊடகம், ஊடக வியலாளருக்கான வலுவூட்டல் பயிற்சிகள் எதிர்வரும் 21 , 22 ஆம் திகதிகளில் கோப்பாய் பிரதேசத்தில் நடைபெறும். இதற்கமைய இப்பயிற்சிப் பட்டறையானது மேற்குறித்த திகதிகளில் நீர்வேலி மாதர் சங்க கூட்டத்தில் முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள ஆர்வமுடையோர் எதிர்வ ரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக 077 162 0044, 077 446 4408 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பயிற்சி ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-5)

## தாத்தாவான பொன்சேகா



(கொழும்பு)

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தாத்தாவா கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

அவரது மூத்த மகளான அப்சரா ஆண் குழந்தை ஒன்றை பிரசவித் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்சராவின் கணவர் ஸ்வின் சேரம் அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள இயர்நெஸ்ட் யங் என்ற கணக்காய்வு நிறுவனத்தின் ஆலோசகராக கடமையாற்றிவருகின்றார்.

குறித்த ஆண் குழந்தைக்கு உமேஸ் பொன்சேகா சேரம் என்று பெயர் வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# தென்சீனக்கடலில் எமக்கு உரிமையுண்டு

## சீன வெளியுறவு துணை அமைச்சர் தெரிவிப்பு

(பீஜிங்)

**சர்ச்சைக்குரிய தென் சீனக்கடல் பகுதியில் வான் பாதுகாப்பு வளையம் அமைக்கும் உரிமை தங்களுக்கு உண்டு என்று சீன வெளியுறவு துணை அமைச்சர் லியு ஜென்மின் தெரிவித்துள்ளார்.**

தென் சீனக்கடல் பகுதியில் சீனா உரிமை கொண்டாடி, ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அங்கு சீனா செயற்கை தீவுகளையும், இராணுவ நிலைகளையும் அமைத்து சர்ச்சையை ஏற்படுத்தியது.

தென் சீனக்கடலில் எங்களுக்கும் பங்கு உண்டு என்று பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருனை, தாய்வான் போன்ற நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. இந்த விவகாரத்தில் தனது உரிமையை நிலை நாட்டுவதற்கு தி ஹேக் நகரில், ஐ.நா. சட்டதிட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தீர்ப்பாயத்தில் பிலிப்பைன்ஸ் கடந்த 2013 ஆம் ஆண்டு ஒரு வழக்கு தொடுத்தது. ஆனால் இந்த வழக்கில் பங்கேற்க சீனா மறுத்து விட்டது.

இந்த வழக்கில் சர்வதேச தீர்ப்பாயம் கடந்த செவ்வாய்க்கிழமை தனது தீர்ப்பை வழங்கியது. அதில், "சர்ச்சைக்குரிய தென் சீனக்கடல் பகுதியில் சீனாவுக்கு சட்டபூர்வ உரிமை இல்லை" என்று கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், "தென்சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டின் இறையாண்மையை சீனா மீறி இருக்கிறது. செயற்கை தீவுகளை உருவாக்கி பவளப் பாறைகள் சூழலுக்கு தீங்கு செய்துள்ளது" எனவும் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையில், சர்ச்சைக்குரிய பகுதியில் தனது உரிமையை நிலை நாட்டுவதற்கு தாய்வான் தனது போர்க்கப்பலை அனுப்புகிறது.

இதற்கிடையே சீனா ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், "தென் சீனக்கடலில் சீனாவுக்கு 2 ஆயிரம் ஆண்டு காலமாக வரலாற்றுபூர்வமாக உரிமை உண்டு. சர்வதேச தீர்ப்பாயத்தில் வழக்கு போட்ட பிலிப்பைன்ஸ்தான் சீனாவின் இடத்தை ஆக்கிரமித்துள்ளது" என கூறப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் நடுவில் சீன வெளியுறவு துணை அமைச்சர் லியு ஜென்மின் நேற்று நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது.

எங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், சர்ச்சைக்குரிய பகுதியில் வான்பாதுகாப்பு வளையம் அமைப்போம். அதற்கு எங்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் இதை அமைப்பதற்கான தேவை, எங்களுக்கு வருகிற அச்சுறுத்தலைப் பொறுத்தே அமையும். தென் சீனக்கடல் பகுதியில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவுவதற்கும், தென் சீனக் கடல் போர் தொடங்கும் இடமாக ஆகாமல் இருப்பதற்கும் சர்வதேச நாடுகள் சீனாவுடன் இணைந்து பணியாற்றும் என நாங்கள் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



# பிரிட்டன் அமைச்சரவை உறுப்பினர்கள் நியமனம்



பிரிட்டன் பிரதமராக பதவியேற்ற தெரேசா மே, தனது புதிய அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்களை நியமித்துள்ளார். நிதியமைச்சராக பிலிப் ஹேமண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியனில் பிரிட்டன் நீடிக்கலாமா? வேண்டாமா? என்று அண்மையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், பிரதமர் டேவிட் கமரூன் கருத்துக்கு எதிராக, ஐரோப்பிய யூனியனில் இருந்து விலக வேண்டும் என்ற கருத்து வெற்றி பெற்றது.

இதனால் கமரூன் பிரதமர் பதவியில் இருந்து நேற்று முன்தினம் விலகினார். அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொண்ட ராணி எலிசபெத், புதிய பிரதமராக தெரேசா மேவை நியமித்தார். அதை யடுத்து, டவுனிங் ஸ்ட்ரீட் அலுவலகத்தில் தெரேசா மே நேற்று முன்தினம் இரவு பதவி ஏற்றார். பின்னர் அவர் தனது புதிய அமைச்சரவை உறுப்பினர்களை நியமித்தார்.

உள்துறை அமைச்சராக ஆம்பர் ரூட் நியமிக்கப்பட்டுள்ளார். லண்டனின் முன்னாள் மேயரும், பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி பிரசாரம் செய்தவருமான, போரிஸ் ஜான்சன் புதிய அமைச்சரவையில் பிரிட்டன் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டன் நிதியமைச்சராக இருந்த ஜார்ஜ் ஆஸ்போர்ன் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக, கமரூன் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இருந்த பிலிப் ஹேமண்ட் புதிய நிதியமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மைக்கேல் பாலோன் பாதுகாப்பு அமைச்சராகத் தொடர்கிறார். லியாம் ஃபாக்ஸ் சர்வதேச வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டேவிட் டேவிஸ், பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டிய தொடர்பான விடயங்களுக்காகப் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் துறைக்கு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (இ-10)

# உயிரை விட்டாவது நான் யார் என்பதை ஜனாதிபதிக்கு காட்டுவேன்

## சுமணரட்ன தேரர் கண்ணீருடன் சூளுரை

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ள போதும் மட்டக்களப்பில் அமைந்துள்ள விஹாரைக்கு அழைத்துச் செல்ல மறுத்ததை கண்டித்து மட்டக்களப்பு விகாராதிபதி அம்பிட்டியே சுமணரட்ன தேரர் தலைமையில் ஊடக சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அம்பிட்டியே சுமணரட்ன தேரர்,

"ஜனாதிபதி 3 தடவைகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தும் 3 தடவையும் விஹாரைக்கு வருவதற்கு விரும்பவில்லை. இங்கு மொத்தம் 3 விஹாரைகள் உள்ளன. இதில் ஒன்றுக்காவது வரமறுத்தது ஏன்?

பள்ளிவாசலுக்குச் செல்ல முடியும், ஆலயங்களுக்குச் செல்ல முடியும் என்றால் ஏன் விஹாரைக்கு அழைப்பு விடுத்தும் வர மறுத்தது என்று எனக்கும் தெரியும், அதுபோல ஜனாதிபதிக்கும் தெரியும் என நினைக்கின்றேன்.

இங்கு யுத்த காலம் முதல் இனபேதம், மத பேதமின்றி நான் தனியாளாக இருக்கின்றேன். ஆனால் எனது அழைப்புக்கு செவி சாய்க்காதது வேதனைக்குரிய விடயமாகும், இதற்கான காரணம் ஜனாதிபதியின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நான் சேதப் படுத்திய காட்சியை சில சர்வதேச ஊடகங்கள் தவறான பாதைக்கு கொண்டு சென்றுள்ளன.

அது உண்மை இல்லை. இங்குள்ள சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பாரிய விடயங்கள் தொடர்பாக பேச விரும்பிய எனக்கு ஜனாதிபதியின் இந்த புறக்கணிப்பு என்னை கல்வெட்டை சேதப்படுத்தும் அளவுக்கு கொண்டு சென்றுள்ளது.

நான் விவாதிக்க தயாராக உள்ளேன். முடிந்தால் என்னுடன் விவாதிக்க வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கின்றேன். இன்று நான் இங்கு இருப்பதற்கு எத்தனை உயிர்த் தியாகங்கள் இடம்பெற்றுள்ளன என்பது எனக்குத்தான் தெரியும்.

அன்பான ஊடக நண்பர்களே நீங்கள் என்னை தப்பானவனாக சித்திரிக்க வேண்டாம். எனது உயிரை விட்டாவது நான் யார் என்பதை ஜனாதிபதிக்கு காட்டுவேன்" என்று தேரர் கண்ணருடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# விவசாயம் செய்யவா? கற்பிக்கவா போகிறீர்கள்?

## கமரூனிடம் வினவிய சிறுமிகள்

(பிரிட்டன்)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பதவி விலகுவதற்கு முன்னர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கு லண்டனிலுள்ள பாடசாலையொன்றுக்குள் விஜயம் செய்து அங்கிருந்த மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது அவரைச் சூழ்ந்து- கொண்ட 6 வயதுடைய சிறுமியர் குழுவொன்று அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகியதும் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறிந்து கொள்ளும் முகமாக அவரிடம் "விவசாயம் செய்யவா அல்லது கற்பித்தலில் ஈடுபட விரும்புகிறீர்கள்?" என வினவினர்.

அதற்குப் பதிலளித்த டேவிட் கமரூன் "விவசாயிகள் முக்கிய தொழிலை மேற்கொள்கிறார்கள் எனக் கருதுகிறேன்.


ஆனால் 3 பிள்ளைகளுக்கு தந்தை என்ற வகையில் அவர்களுக்கு எவ்வாறு வாசிப்பது என்பதைக் கற்பிக்க வேண்டியுள்ளது. அதனால் நான் அந்தப் பணியையே தெரிவு செய்வுள்ளேன் என்று கமரூன் தெரிவித்தார். (இ-10)

# ஜூனோ அனுப்பிய முதல் படம்

(வோஷிங்டன்)

வியாழன் கிரகத்தில் ஆய்வு மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பிய "ஜூனோ" விண்கலன், அந்த கிரகத்தைப் படமெடுத்து அனுப்பத் தொடங்கியுள்ளது.

வியாழன் கிரகத்தின் சுற்றுப் பாதைக்குள் அந்த விண்கலன் கடந்த வாரம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அது அந்த கிரகத்தையும், அதன் 3 நிலவுகளையும் எடுத்து



அனுப்பிய முதல் படத்தை நாசா நேற்று முன்தினம் வெளியிட்டது. (இ-10)

# பிரிட்டனின் புதிய பிரதமர் பதவியேற்பு











பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் நேற்று முன்தினம் முறைப்படி பதவி விலகியதையடுத்து, அந்த நாட்டின் புதிய பிரதமராக, தெரசா மே பதவியேற்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்த டேவிட் கமரூனுக்கு, பிரித்தானிய மக்கள் கருத்துக்கணிப்பில் ஆதரவு அளிக்கவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக பிரித்தானிய மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்ததால், தாம் பதவி விலகப் போவதாக டேவிட் கமரூன் உடனடியாகவே அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், புதிய பிரதமராக தெரசா மே, தெரிவு செய்யப்பட்டதையடுத்து, டேவிட் கமரூன் நேற்றுமுன்தினம் தமது பதவி விலகல் கடிதத்தை பிரித்தானிய மகாராணியிடம் கையளித்தார்.

அதையடுத்து, பிரித்தானிய மகாராணியை சந்தித்த தெரசா மே, புதிய பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். பிரித்தானியாவின் இரண்டாவது பெண் பிரதமர் தெரசா மே என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதமராகப் பதவியேற்ற பின்னர் தெரசா மே தனது புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளார். இதன்படி, பிரித்தானியாவின் புதிய வெளிவிவகாரச் செயலராக பொரிஸ் ஜோன்சன் நியமிக்கப்பட்டுள்ளார். லண்டன் மாநகர முதல்வராக இருந்த இவர், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேற வேண்டும் என்று கடுமையான பரப்புரைகளை மேற் கொண்டவராவார்.


அதேவேளை, புதிய அமைச்சரவையில் அனைத்துலக வர்த்தக அமைச்சராக, இலங்கை அரசாங்கத்துடன் நீண்ட காலமாகத் தொடர்புகளை வைத்துள்ள லியாம் பொக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# விடைபெற்றார் டேவிட் கமரூன்









பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரதமருக்கான கேள்விகள் நிகழ்ச்சியில் கடைசியாக நேற்று முன்தினம் கலந்து கொண்டுவிட்டு, பின்னர் அவர் பக்கிங்ஹாம் அரண்மனையில் பிரிட்டிஷ் அரசியை சந்தித்து தனது இராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார்.

கடந்த மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் உறுப்பினராகத் தொடர வேண்டுமா என்பது குறித்து நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், தொடரவேண்டும் என்று அவர் எடுத்த நிலைப்பாட்டுக்கு ஆதரவு கிடைக்காததால் பதவி விலகப் போவதாக கமரூன் அறிவித்தார்.

அடுத்தபடியாக பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பவர் தெரசா மே. அவர் கடந்த திங்கட்கிழமையன்று கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

கருத்துக்கணிப்பில் அவரும் கமரூன் எடுத்த , பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடரவேண்டும் என்ற நிலைப்பாட்டையே எடுத்திருந்தாலும், கருத்துக் கணிப்பு முடிவை அடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முடிவை அமுல்படுத்தப் போவதாக உறுதியளித்திருக்கிறார்.

இதேவேளை பிரதமர் அலுவலகத்தில் இருந்த தனது பொருட்களை எவ்வித உதவியும் இன்றி தானே எடுத்துச் சென்றார் டேவிட் கமரூன்.

இதேவேளை நான் இன்று பதவி விலகியதையடுத்து எதிர்காலத்தில் வலுவான ஒரு நாட்டை மக்களால் காண முடியும். இதேபோன்று நாட்டைப் பாதுகாப்பதை ஒரு கௌரவமாக நினைக்கிறேன் என்றார்.

பிரதமர் பதவியை உத்தியோகபூர்வமாக இராஜினாமா செய்தார் டேவிட் கமரூன். இராஜினாமா கடிதத்தை மகாராணியிடம் அவர் கையளித்தார். (இ-10)

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## இரசாயனவியல் பகுதி-I

## கொழும்பு றோயல் கல்லூரி


1) A,B,C ஆகியன ஆவர்த்தன அட்டவணையில் 4 ஆம் ஆவர்த்தனத்திற்குரிய மூன்று மூலகங்களாகும். இவை மூன்று ஒவ்வொரு சோடியற்ற இலத்திரனைக் கொண்டுள்ளன. இவற்றின் திசைவில்சக்திச் சொட்டெண்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. A,B,c ஆகியவற்றின் சரியான மூலகத் தெரிவு
1. K, Sc, Cr  2. Sc, Cr, Cu  3.K, Sc, Ga
4.Cr, Cu, Ga  5. K, Sc, Cu

2) பின்வருவனவற்றில் முனைவற்ற மூலக்கூறு எது?
1. $NF_3$  2.$O_3$  3. $CHCL_3$  4. $PCL_5$  5. $NO_2$

3) $[:\ddot{O}-X-\ddot{O}:]^+$ இக்கட்டமைப்பில் X ஆனது ஆவர்த்தன அட்டவணையில் P தொகுப்பிற்குரியது எனின் X இனது கூட்டமானது
1. 13/IIA  2. 14/IVA  3. 15/VA
4. 16/VIA  5. 17/VIIA


4) கணாலைற்றுக் கரைசலிலுள்ள $C1^-$ அயன்களின் அடர்த்தியானது $1.065gcm^{-3}$ எனின் இக்கரைசலிலுள்ள $Mg^{2+}$ அயன்களின் செறிவு $mol\ dm^{-3}$ இல் (Mg=24, Cl=35.5, K=39, O=16, H=1)
1) 0.09  2) 0.03  3) 0.045  4) 0.04  5) 0.010

5) கீழே தரப்பட்ட சேர்வையின் IUPAC பெயரானது




1. Ethyl 5-bromo-6-formylhex-3-yneoate
2. Ethyl 5-bromo-6-oxohex-3-ynoate
3. Ethyl 5-bromo-6-oxopent-3-ynoate
4. Ethoxy 5-bromo-5-formy1pent-3-ynoate
4. Ethoxy 6-formy 1-5-bromohex-3-ynoate

6)



இனை Zn(Hg)/ செறி HC1 உடன் பரிகரிக்கும்போது பெறப்படும் விளைவு/ விளைவுகள்



7) கூட்டல் தாக்கங்கள் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. C=C, C=O ஐக் கொண்ட சேர்வைகள் கருநாட்டக்கூட்டலில் ஈடுபடும்
2. காபனைல் சேர்வைகளின் கருநாட்டக்கூட்டல் தாக்கவீதம் வேறுபடும் ஒழுங்கு
$HCHO > CH_3CHO > CH_3CH_2COCH_3$
3. எதனலை HCN உடன் பரிகரிப்பதால் பெறப்படும் விளைவுக்கலவையானது ஒளியியல் தொழிற்பாட்டைக் காட்டாது
4. எதனலை HCN உடன் பரிகரிப்பதால் பெறப்படும் விளைபொருளானது சமச்சீரற்ற காபனைக் கொண்டுள்ளது
5. பல்பிணைப்புக்களைக் கொண்ட எந்தவொரு சேதனச்சேர்வையும் கருநாட்டக் கூட்டலில் ஈடுபடும்


8) நைத்திரசு அமிலம் $(HNO_2)$ ஆனது $K_a=4.5x10^{-5}\ mol\ dm^{-3}$ ஐ உடையது $0.1\ mol\ dm^{-3}$ நைத்திரசு அமிலக் கரைசலொன்றிலுள்ள கூறுகள் தொடர்பாக கூற்றுக்களில் மிகப்பொருத்தமான விபரிப்பானது
1. $H^+$, $NO_2^-$ ஆகியன அதிகளவிலும் $HNO_2$ மிகக்குறைந்தளவில் இருக்கும்
2. $H^+$ உம் $NO_2^-$ உம் மாத்திரமே அளவிடக்கூடிய அளவிலுள்ளன.
3. $HNO_2$ அதிகளவிலும் H+, $NO_2^-$ என்பன மிகக்குறைந்தளவிலும் காணப்படும்.
4. $HNO_2(aq)$, $H^+(aq)$, $NO_2^-(aq)$ ஆகியன குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றன.
5. $HNO_2(aq)$, $H^+(aq)$, $NO_2^-(aq)$ ஆகியன சம அளவில் காணப்படுகின்றன.


9) வாயு அவத்தையில் $K_p/K_c$ இற்கிடையிலான விகிதம் $6.2x10^6\ J^2mol^{-2}$ ஆகவுள்ள சரியான தொடர்பு பின்வருவனவற்றில் எது?
(1) $A(g) + B(g) \rightleftharpoons C(g) + 2D(g)$
(2) $2A(g) + B(g) \rightleftharpoons 2C(g) + D(g)$
(3) $A(g) + 3B(g) \rightleftharpoons 2C(g) + 2D(g)$
(4) $A(g) + B(g) \rightleftharpoons 2C(g) + 2D(g)$
(5) $3A(g) + 2B(g) \rightleftharpoons 2C(g) + B(g)$

10) $SO_2$ ஐ $H_2S$ ஆக மாற்றுவதற்கன ஆரம்பப்படிகளில் மிகவும் பொருத்தமானது
(1) $SO_2 + Mg \longrightarrow$
(2) $SO_2 + H_2O_2 \longrightarrow$
(3) $SO_2 + Cl_2 \longrightarrow$
(4) $SO_2 + HI \longrightarrow$
(5) $SO_2 + NaOH \longrightarrow$


11) 3d மூலகங்கள் தொடர்பான கூற்றுக்களில் மிகவும் சரியானது
1. 3d மூலகங்களின் எல்லா உப்புக்களும் நிறமுடையவை
2. Sc இலிருந்து Co வரையான மூலகங்களில் அவற்றின் 4s, 3d இலத்திரன்கள் உயர் ஒட்சியேற்ற நிலையை வழங்குவதில் உதவுகின்றன.
3. $Fe^{3+}$ அயன்கள் $NH_3$ யுடன்ன சிக்கலயனை உருவாக்கும்.
4. 3d மூலகங்கள் அவற்றின் ஒட்சைட்டுக்களும் மாத்திரமே ஊக்கிகளாகச் செயற்படும்
5. mn இனால் மூல, ஈரியல்பு ஒட்சைட்டுக்களை உருவாக்க முடியும்


12) $NH_4OH$ மற்றும் $NH_4CL$ ஐக் கொண்ட கரைசலொன்றினுள் $AgNO_3$ கரைசலைத் துளித்துளியாக சேர்க்கும்போது நடைபெறக்கூடியது
1. சிறிதளவு $AgNO_3(aq)$ ஐச் சேர்த்த பின்னர் வெண்ணிற வீழ்படிவு ஒன்று உருவாகும்.
2. உருவாகும் வெண்ணிற வீழ்படிவானது மிகை $AgNO_3$ லில் கரையும்
3. எந்தவொரு அவதானமும் பெறப்படவில்லை
4. உறுதியான வீழ்படிவொன்று உருவாகும்
5. கபிலநிற வீழ்படிவொன்று உருவாகி கரையும்

13) NaOH கரைசலில்  இன்தன்ஒடுங்கலால்பெறப்படும்விளைவின் கட்டமைப்பானது



14) சேதன இரசாயனத் தாக்கங்கள் தொடர்பாக சரியான கூற்று அல்லாதது
1. முனைவற்ற C=C பிணைப்பை $LiA1H_4$ ஆனது தாழ்த்தமாட்டாது
2. அறைவெப்பநிலையிலுள்ள வளிமண்டல அமுக்கத்திலும் பீனோலானது திண்ம நிலையில் காணப்படும்
3. பீனோலில் இடம்பெறும் பிரதியீட்டு தாக்கங்களுக்கு ஊக்கி அவசியமில்லை
4. தாழ்த்தல் தாக்கங்களில் $LiA1H_4$ இலுள்ள $H^-$ ஆனது ஒரு இலத்திரன் நாடியாகத் தொழிற்படும்.
5. பீனோலுக்கும் புரோமின் நீருக்குமிடையிலான தாக்கத்தில் HOBr மூலக்கூறிலுள்ள $\delta^+$ புரோமின் ஆனது இலத்திரன் நாடியாக செயற்படும்

15)  இத் தாக்கத்தின் பிரதான விளைபொருளானது



16) வெப்பநிலை T யில் $Ca(OH)_2$ இன் கரைதிறன் பெருக்கமானது $4x10^{-5}\ mol^3\ dm^{-9}$ ஆகும். அதே வெப்பநிலையில் $CaSO_4$ இன் கரைதிறன் பெருக்கம் $9x10-6mol^2\ dm^{-8}$ ஆகும். $0.10mol\ dm^{-3}$ NaOH கரைசலில் $50.0cm^3$ உம் $0.10\ mol\ dm^{-3}$ NaOH இனதும் $0.10\ mol\ dm^{-3}\ Na_2SO_4$ இனதும் $50.0cm^3$ கலவையும் $1.0mol\ dm^{-3}\ CaCl_2$ இன் $50.0cm^3$ உடன் நன்றாக கலக்கப்பட்டது. $OH^-$ இனதும் $SO_4^{2-}$ இனதும் இறுதிச் செறிவுகள் $mol\ dm^{-3}$ இல் முறையே
(1) $9 \times 10^{-6}, 2 \times 10^{-6}$  (2) $3 \times 10^{-6}, 2 \times 10^{-6}$  (3) $6 \times 10^{-3}, 3 \times 10^{-3}$
(4) $3 \times 10^{-3}, 6 \times 10^{-3}$  (5) $2 \times 10^{-6}, 3 \times 10^{-6}$

17) நீரும் பென்சீனும் ஒன்றோடொன்று கலக்கும் தகவற்ற இரு திரவங்களாகும். இக் கலவையின் நீரின் மூலச்சதவீதம் கொதிநிலை என்பன முறையே 44.4%, 69.0°C. இவ் வெப்பநிலையில் நீரின் நிரம்பலாவி அமுக்கம் 200 mmHg ஆகும் எனின் ஆவியிலுள்ள பென்சீனின் மூல் சதவீதம் யாது? (வளிமண்டல அமுக்கம் 760mmHg)
1) 56.5%  2) 83.6%  3) 73.6%  4) 56.6%  5) 44.4%

18) $Cro_4^{2-}$, $OH^-$, $Cl^-$, $NO_3^-$ ஆகிய அயன் இனங்களைக் கொண்ட நீர்க் கரைசலொன்றில் $Cro_4^{2-}$ இனை இனம் காண்பதற்கு மகவும் பொருத்தமானது
1. $Na^+$  2. $K^+$  3. $Mg^{2+}$
4. $Ca^{2+}$  5. $Ba^{2+}$

19) மென்னமிலம் ஒன்றையும் அதன் உப்பையும் கொண்ட தாங்கல் கரைசல் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது. மென்னமிலத்தின் கூட்டற்பிரிகை மாறிலி $K_a$ ஆகவும் கரைசலில் மென்னமிலத்தினதும் அதன் சோடியம் உப்பினதும் செறிவுகள் சமனாகவும் இருப்பின் கரைசலின் PH ஆனது
1. $ph>pK_a$  2. $pH=pK_a$  3. $ph<pK_a$  4. $pH+pK_a=14$  5. $pH/pK_a=pk_w$

20) குறித்த கனவளவுடைய $Na_2CO_3$ ஐயும் $NaHCO_3$ ஐயும் கொண்ட கரைசலொன்று பினோப்தலின் காட்டி முன்னிலையில் ஐதான HCl இனால் நியமித்த போது முடிவுப்புள்ளி $x_1cm^3$ ஆகும். இதே நியமிப்பை இதே HC1 இனால் மெதையில் செம்மஞ்சள் காட்டி முன்னிலையில் நியமித்தபோது முடிவுப்புள்ளி $x_2cm^3$ ஆகும். $HCO_3^-/\ CO_3^{2-}$ மூலர் விகிதம் பின்வருவனவற்றுள் யாது?
(1) $x_2/x_1$  (2) $x_2/(x_2-x_1)$  (3) $x_2/(x_2+x_1)$  (4) $(x_2-2x_1)/x_1$  (5) $(x_2-x_1)/x_1$

21) 2v கனவளவும் $2.4X10^5$ pa அமுக்கமும் கொண்ட பாத்திரமொன்றில் A,B எனும் இரு இலட்சிய வாயுக்கள் 27°C யில் உள்ளன. Aயின் பகுதியமுக்கம் $1.5x10^5$ pa ஆகும். V கனவளவும் 47°C வெப்பநிலையிலும் உள்ள C எனும் இலட்சியவாயுவைக் கொண்ட இன்னொரு கொள்கலனொன்றுடன் இணைக்கப்பட்டது. 127° க்கு உயர்த்தப்பட்து. தொகுதியின் புதிய அமுக்கம் $3.2x10^5$ pa எனின் 127°C இல் பகுதியமுக்கம் pa இல்
1) $2.13x10^5$  2) $1.07x10^5$  3) $2.56x10^5$  4) $1.20x10^5$  5) $1.50x10^5$

22) வாயுக்கள் Aயும் Bயும் பின்வருமாறு தாக்கம் புரியும்

$$2A(g) + B(g) \longrightarrow C(g) + 3D(g)$$

A தொடர்பான தாக்கவரிசை 1, B தொடர்பான தாக்க வரிசை 0 ஆகும். v கனவளவும் T வெப்பநிலையைக் கொண்ட விறைத்த கொள்கலத்தில் A யின் n மூல்களும் B யின் n மூல்களும் இடப்பட்டது. ஆரம்ப அமுக்கம் $P_1$ ஆகவும் 30s இன் பின் $p_2$ ஆகவும் இருந்தது. 30s இன் பின் தாக்கவீதம் தொடர்பான சரியான தொடர்புடையமையானது
1) $3P_1-P_2$  2) $2P_2-P_1$  3) $2P_1-P_2$  4) $P_2-P_1$  5) $3P_2-P_1$

23) மின்னிரசாயனக்கலங்கள், மின்வாய்கள் தொடர்பான கூற்றுக்களில் சரியானது
1. திரவசந்தி இல்லாது மின்னிரசாயனக்கலமானது தொழிற்படாது
2. ஒரு திரவ சந்தியுடன் ஒரு மின்னிரசாயன கலம் தொழிற்படும்போது திரவசந்தி அழுத்தம் மாறும்
3. Mg ஐ $0.050mol\ dm^{-3}\ mgcl_2$ கரைசலில் 25°C யில் பகுதியாக அமிழ்த்துவதால் நியம $mg^{2+}(aq)/mg(s)$ மின்வாய் உருவாக்கப்படும்.
4. ஒரே உலோகத்தின் இரண்டு உலோக-உலோக அயன் மின்வாய்களைப் பயன்படுத்தி மின்னிரசாயனக் கலமொன்றை தயாரிக்க முடியும்.
5. Ag-AgCl நியமமின்வாய் அழுத்தமானது பூச்சியமாகக் கொள்ளப்படும்

24) பின்வரும் சமநிலையைக் கருதுக.

$$X(g) \rightleftharpoons 2Y(g) \qquad \Delta H = +57\ kJ\ mol^{-1}$$

தொகுதியின் அடர்த்தியானது $2.5g\ dm^{-3}$ எனின் வெப்பநிலையை இருமடங்கால் அதிகரிக்கும் போது அடர்த்தியில் ஏற்படும் மாற்றம் தொடர்பாக உண்மையானது
1. அதிகரிக்கும்  2. குறையும்  3. மாற்றமில்லை
4. கனவளவு தரப்படாமையால் கணிப்பிட முடியாது  5. அடர்த்தி அரை மடங்காகும்

25) $25^0C$ யில் மென்னமிலம் HA யின் கூட்டற்பிரிகை மாறிலி $K_a$ ஆனது $5.6x10^{-19}\ mol\ dm^{-3}$ ஆகும். $1mol\ dm^{-3}$ HA கரைசலின் pH $25^0C$ யில் $(K_w=1.0X10^{-14}\ mol^2\ dm^{-6})$
1) 4.9  2) 7.0  3) 9.1  4) 5.1  5) 10.0

26) நடுநிலை $KMnO_4$ கரைசலுக்குள் $H_2O_2$ ஐச் சேர்க்கும் போது கபில நிற வீழ்படிவு ஒன்று உருவாகும். $KMnO_4$ இற்கும் $H_2O_2$ இற்குமிடையிலான பீசமான விகிதமானது
1) 2:5  2) 3:2  3) 5:2  4) 2:3  5) 5:4


27) $Al_2O_3(s)$ இனதும் $Cr_2O_3(s)$ இனதும் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறைகள் முறையே $-1672kJ\ mol^{-1}$, $-724\ KJ\ mol^{-1}$ ஆகும். 1040 kg Cr ஆனது பின்வருமாறு தாக்கமடையுமெனில், ஏற்படும் வெப்பவுள்ளுறை மாற்றம் யாது? (Cr=52.0, A1 =27.0, O=16.0)

$$Cr_2O_3(s) + 2Al(s) \longrightarrow 2Cr(s) + Al_2O_3(s)$$

1) -948 KJ  2) +9480 KJ  3) -4740 KJ  4) 948 KJ  5) -9480 KJ

28) அமிலவலிமை அதிகரிக்கும் ஒழுங்கானது?
1. $C_2H_4<C_2H_5OH<C_2H_2<C_2H_5COOH$
2. $C_2H_2<C_2H4<C_2H_5OH<C_2H_5COOH$
3. $C_2H_4<C_2H_2<C_2H_5OH<C_2H_5COOH$
4. $C_2H_4<C_2H_5COOH<C_2H_2<C_2H_5OH$
5. $C_2H_5OH<C_2H_4<C_2H_5COOH<C_2H_2$

29) பின்வரும் சேர்வைகளை வேறுபிரித்தறிவதற்கு பொருத்தமான சோதனைப்பொருள்



1. நடுநிலை $FeCl_3$ கரைசல்
2. லூக்காஸின் சோதனைப்பொருள்
3. அறைவெப்பநிலையில் $NaNO_2$/ செறி HCl
4. 2,4-DNP
5. தொலனின் சோதனைப்பொருள்

14 ஆம் பக்கம் பார்க்க

## இரசாயனவியல் பகுதி-I தொடர்ச்சி...

30) பல்பகுதியங்கள் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. இறப்பர் பாலானது Cis- பெலிஐசோபிரீனைக் கொண்டுள்ளது
2. ரெப்லோன் ஆனது வெப்பமிறுக்கும் பல்பகுதியமாகும்
3. Nylon -6,6 இன் சங்கிலிகள் ஐதரசன் பிணைப்பை கொண்டுள்ளன
4. இறப்பரை திணிவு ரீதியில் 20% கந்தகத்துடன் சேர்த்து வெப்பமேற்றும் போது வல்கனைஸ்படுத்தப்பட்ட இறப்பர் பெறப்படும்
5. யூரியா போமல்டிகைட்டானது ஒரு இருபரிமாண வெப்பமிறுக்கும் பல்பகுதியமாகும்

31) பின்வரும் தாக்கம் தொடர்பான கூற்றுக்களில் சரியானது/ சரியானவை

$2KOH(aq)+H_2SO_4 \longrightarrow K_2SO_4(aq)+2H_2O(g)$ $\Delta H y KJ\ mol^{-1}$


a. $H_2SO_4$ இன் நியம நடுநிலையாக்கல் வெப்பவுள்ளுறையானது $-yKJ\ mol^{-1}$ ஆகும்
b. இத்தாக்கத்தின் நியம வெப்பவுள்ளுறை மாற்றமானது $-y\ KJ\ mol^{-1}$ ஆகும்
c. NaOH இன் நியமநடுநிலையாக்கல் வெப்பவுள்ளுறையானது $-y/2\ KJ\ mol^{-1}$
d. $H_2SO_4$ இன் நியமநடுநிலையாக்கல் வெப்பவுள்ளுறையானது $-y\ KJ\ mol^{-1}$

32) பின்வருவனவற்றுள் எது/எவை $KI_3$ கரைசலின் நிறத்தை நீக்கக்கூடிய இனம்/இனங்கள்

a. $SO_2(g)$ b. NaCl(aq) c. $CuSO_4(aq)$ d. NaOH(aq)

33) சரியான கூற்று/ கூற்றுக்களைத் தெரிவு செய்க
a. $KMnO_4$ இன் முற்றான வெப்பப்பிரிகையால் உருவாகும் விளைவானது NaOH கரைசலில் கரைந்து பச்சை நிறக் கரைசலைத் தோற்றுவிக்கும்
b. $PCl_5$ நீருடன் தாக்கம் புரிவதால் $H_3PO_4$, $POCl_3$ ஆகிய இரண்டையும் பெறமுடியும்
c. $SbCl_3$ இன் நீர்ப்பகுப்பானது ஓர் தாழ்த்தலேற்றத் தாக்கமாகும்
d. $CuSO_4$ கரைசலினுள் NaOH கரைசலை துளித்துளியாக சேர்க்கும்போது உருவாகும் மென்நீல வீழ்படிவானது மிகை NaOH இல் கரையும்

34) வலப்புறம் காணப்படும் மூலக்கூறு தொடர்பான தவறான கூற்று/கூற்றுக்கள்




a. எல்லா காபன் அணுக்களும் $sp^2$ கலப்புடையன
b. எல்லா C-C பிணைப்புக்களும் நீளத்தில் சமனானவை
c. a,b,c என பெயரிடப்பட்ட காபன் அணுக்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன
d. a எனக் குறிக்கப்பட்ட காபனும் b,c எனப் பெயரிடப்பட்ட காபன் அணுக்களில் உள்ள ஐதரசன் அணுக்களும் ஒரே தளத்தில் உள்ளன

35) பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியானவை?
a. பீனோலிலிருந்து உருவாகும் பினேற்று அயனானது எதனோலிருந்து உருவாகும் எதொசைட்டு அயனிலும் உறுதி கூடியது
b. ஒரு சக்கர ஐதரோக்காபனில் 6 அல்லது 6 இலும் கூடிய $\pi$ இலத்திரன்கள் இருப்பின் அது ஓர் அரோமற்றிக்கு சேர்வை ஆகும்
c. எல்லா அல்டிகைட்டுகளும் ஐதான NaOHJ முன்னிலையில் தன் ஒடுங்கலுக்குட்படும்
d. லூக்காஸின் சோதனைப்பொருளுடன் வழி அற்ககோல்கள் புடை அற்ககோலிலும் பார்க்க விரைவாகத் தாக்கம் புரியும்

36) வாயுக்களின் மூலக்கூற்று இயக்கவியல் கொள்கை தொடர்பான கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?
a. மாறாவெப்பநிலையில் இலட்சியவாயு மூலக்கூற்றொன்றின் இயக்கசக்தியானது ஒரு மாறிலி ஆகும்
b. வெப்பநிலை அதிகரிக்கும்போது மூலக்கூற்றுப்பின்னத்துடன் வாயுவின் உச்ச நிகழ்தகவு இயக்கப்பாட்டுச்சக்தி அதிகரிக்கும்
c. வெப்பநிலையுடன் இலட்சியவாயுவொன்றின் சராசரிக்கதி அதிகரிக்கின்றது
d. மாறா வெப்பநிலையில் வாயுவொன்றின் கதிர்வர்க்க இடையானது மூலர் திணிவுக்கு நேர் விகித சமனாக இருக்கும்

37) வளிமண்டல நைதரசனுக்கான பிரதான மூலம் யூரியா உற்பத்தி தொடர்பான கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?
a. திரவ அமோனியாவும் திண்ம $CO_2$ வும் அறைவெப்பநிலை, வளிமண்டல அமுக்கத்தில் தாக்கமடைகின்றன
b. அமோனியம் காபமேற்றின் $(H_2NCOONH_4)$ வெப்பப்பிரிகையால் யூரியா பெறப்படும்
c. நிரம்பல் கரைசலை ஆவியாக்குவதன் மூலம் யூரியா பளிங்குகள் பெறப்படும்
d. யூரியாவானது பசளையாக மாத்திரமே பயன்படுத்தப்படும்


38) வளிமண்டல மாசடைதல் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியனவை?
a. $CO_2$ ஆனது பூகோளவெப்பமுறலில் முக்கிய பங்கு வகிப்பதுடன் CFC யும் அதற்கு பங்களிப்பை நல்கின்றது
b. $CO_2$ வைப்போல கந்தகத்தின் ஒட்சைட்டுக்களும் அமிலமழைக்கு காரணமாகின்றன.
c. ஓசோன்படை சிதைவதில் CO, CFC, $SO_2$ ஆகிய வாயுக்கள் காரணமாகின்றன.
d. மோட்டார் வாகனங்களிலிருந்து குறைதகனத்தின் மூலம் வெளிவரும் தகனமடையாத ஐதரோகாபன்களும், நைதரசனின் ஒட்சைட்டுக்களும் ஒளியிரசாயனப் புகாரிற்கு காரணமாகின்றன

39) பின்வருவனவற்றில் சரியான கூற்று/ கூற்றுக்களைத் தெரிவு செய்க
a. குறித்தவொரு தாக்கி தொடர்பான தாக்கவரிசை பூச்சியமெனின் அது ஒரு பல்படிமதாக்கமாகும்
b. பல்படிமத்தாக்கமொன்றின் முதல் படியானது தாக்கநிர்ணயப்படியெனின் தாக்கச் சமன்பாடானது முதலாம் படித்தாக்கிகளை மட்டுமே கொண்டிருக்கும்
c. ஊக்கிகளும் மீளும் தாக்கமொன்றின் முன்முகத்தாக்கத்தின் ஏவற்சக்தியையும் பின்முகத் தாக்கத்தின் ஏவற்சக்தியையும் வேறுபட்ட அளவுகளில் மாற்றும்
d. ஊக்கிகள் தாக்கமொன்றின் கிப்ஸின் சுயாதீன சக்தியை மாற்றும்

40) பின்வரும் சோடிகளில் மைய அணுவைச்சூழ வேறுபட்ட இலத்திரன் சோடிக்கேத்திர கணிதத்தினையுடைய சோடி/சோடிகள்

(a) $XeOF_4$; $H_3^+O$ (b) $SO_3$, $XeO_2F_2$

(c) $PCl_6^-$, $XeO_4$ (d) $XeF_4$, $^-CH_3$

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 41. | $0^oC$ இல் ஒரு மூல் NaBr(s) இன் எந்திரப்பியானது பூச்சியமாகும் | தூய அயன் சேர்வையொன்றின் எந்திரப்பியானது $0^oC$ இல் பூச்சியமாகும் |
| 42. | இரசாயன இயக்கச் சமநிலையின் வெப்பநிலை அதிகரிக்கும்போது புறவெப்பத் தாக்கவீதம் குறைகின்றது | வெப்பநிலை அதிகரிக்கும் போது சமநிலையானது அகவெப்பத்தாக்கத்திற்குச் சாதகமான திசையில் நகரும் |
| 43. | Mg இற்கும் $NH_3$ வாயுவிற்குமிடையேயான தாக்கத்திலிருந்து மக்னீசியத்தின் நைதரைட்டு உருவாகும் | $NH_3$ ஆனது ஒட்சியேற்றும் கருவியாகச் செயற்படும் |
| 44. | $0.10\ mol\ dm^{-3}\ CH_3COOH$ இற்கும் $0.10 mol\ dm^{-3}$ NaOH இற்குமிடையிலான நியமிப்பிற்கு புரோமோதைமோல் நீலம் $(pK_{In}=7)$ ஒரு பொருத்தமான காட்டி ஆகும் | புரோமோதைமோல் நீலத்தின் pH மாற்ற வீச்சினுள் இந்நியமிப்பின் சமவலுப்புள்ளியானது உள்ளது |
| 45. |   மிக இலகுவாக நீர்ப்பகுப்படையும் | அற்ககோலிலுள்ள அற்கைல் கூட்டமானது எசுத்துரின் நீர்ப்பகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் |
| 46. | $0.10\ mol\ dm^{-3}\ CH_3CH_2ONa$ யினது $20cm^3$ உம் $0.20\ mol\ dm^{-3}\ CH_3COOH$ இன் $20.0\ cm^3$ உம் கொண்ட கரைசலானது தாங்கற் தொழிற்பாட்டைக் காட்டும் | மென்னமிலமொன்றையும் அதனது இணை மூலத்தையும் கொண்ட கரைசல் தாங்கற் தொழிற்பாட்டைக் காட்டும் |
| 47. | கொதிநீராவி காய்ச்சி வடிப்பில் கலவையானது $100^oC$ க்குக் குறைவான வெப்பநிலையில் கொதிக்கும் | புற அமுக்கத்தை மாற்றுவதன் மூலம் கரைசலொன்றின் கொதிநிலையை மாற்ற முடியும் |
| 48. | வளிமண்டல அமுக்கத்தில் NaCl கரைசலில் கொதிநிலையானது அதே நிபந்தனையில் தூயநீரின் கொதி நிலையிலும் உயர்வானது | NaCl கரைசலில் அயன்-இருமுனைவுக் கவர்ச்சிவிசையானது காணப்படுகின்றது |
| 49. | காந்தப்புலத்தில் நேர்க்கதிர்கள் ஒரு வளைந்த பாதையில் பயணிக்கும் | எல்லா உப அணுத்துணிக்கைகளும் காந்தப் புலத்தில் வளைந்த பாதையில் பயணிக்கும் |
| 50. | புளோரீனின் முதலாம் இலத்திரன் நாட்டமானது குளோரினின் முதலாம் இலத்திரன் நாட்டத்திலும் அதிகம் புறவெப்பத்திற்குரியது | 17 ம் கூட்டத்தின் வழியே கீழ்நோக்கிச் செல்லும் போது முதலாம் இலத்திரன் நாட்டமானது குறைந்தளவு புறவெப்பத்திற்குரியது |

கொழும்பு றோயல் கல்லூரி

## பௌதிகவியல் பகுதி- II தொடர்ச்சி

கொழும்பு றோயல் கல்லூரி

iv) திரவமாக ஒடுக்கும் குழாய் குளிரேற்றியின் வெளிமேற்பரபபில் பொருத்தப்பட்டிருப்பதற்கான காரணத்தைக் கூறுக.

v) ஆவியாக்கலை குளிரேற்றியின் மேல் பகுதியில் வைத்திருப்பதற்கான காரணத்தைக் கூறுக.

vi) புறவேலை செய்யும் வீதம் W உம் குளிர் பகுதி பெறும் வலு $Q_2$ உம் சுழலுக்கு இழக்கப்படும் வீதம் $Q_1$ யாது?

vii) குளிரேற்றியின் திறனை செயற்றிறன் குணகம்(coefficient of performance E) $E=Q_2/w$ ஆல் கொடுக்கப்படுகின்றது. குளிரேற்றியிலுள்ள வாயு இலட்சிய வாயுவின் $E=T_2/T_1-T_2$ ஆகவும். $T_1$ ஆனது உயர் வெப்பநிலையும் $T_2$ ஆனது இழிவுவெப்பநிலையும் ஆகும்.

i) குளிரேற்றியில் $10^oC$ இலுள்ள குளிரான பகுதியிலிருந்து $30^oC$ இலுள்ள சூடான பகுதிக்கு 263 W வீதத்தில் வெப்பம் மாற்றப்படுகின்றது. இலட்சிய வாயு எனக் கருதி நுகரும் வலுவைக் காண்க.

ii) குளிரேற்றியின் கதவு முற்றாக மூடப்பட்டிருப்பினும் சூழலிருந்தான சிறிய வெப்பப் பரிமாற்றம் காரணமாக மின் வழங்கல் அடிக்கடி நடைபெறும்.குளரேற்றி நுகரும் மின்வலு P ஆனது நேரத்துடன் மாறுவதைக் காட்டுவதற்கான வரைபை வரைக.


iii) நன்றாகவெப்பக்காவலிடப்பட்டுள்ளமூடிய அறையில்தொழிற்பட்டுக்கொண்டிருக்கும்குளிரேற்றியின் கதவு திறந்திருந்தால் அறையின் வெப்ப நிலை குறையுமா? விளக்குக.

iv) மூடிய அறையொன்றின் வெப்ப நிலை $30^oC$ யும் தொடர்பு ஈரப்பதன் 80% உம் ஆகும். வளிப்பதப்படுத்தும் கருவியைத் தொழிற்படச் செய்து அறையின் வெப்ப நிலை $20^oC$ ஆகுமாறு குறைக்கப்பட்டு தொடர்பு ஈரப்பதன் பொருத்தமான பெறுமானத்திற்கு கொண்டுவரப் படுகின்றது. இக் காலத்தில் ஒடுங்கிய நீரின் திணிவு 77.5 g ஆயின் அறையின் தொடர்பு ஈரப்பதனைக் காண்க.

$30^0C$ இல் நீரின் நிரம்பலாவியின் அடர்த்தி $=30\times10^{-6}\ kg\ m^{-3}$
$20^0C$ இல் நீரின் நிரம்பலாவியின் அடர்த்தி $= 17\times 10^{-6}\ kg\ m^{-3}$

(B) பின்வரும் பந்தியை கவனமாக வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

துணிக்கைகள் அலை இயல்பை காட்டலாம் என்னும் எண்ணக்கரு 1924 ம் ஆண்டு லூயிஸ் லூயி டி புறக்லி (Louis De Broglie)என்பவரினால் முன்வைக்கப்பட்டது. ஒளியை ஆராய்ந்ததில் அதில் காணப்பட்ட துணிக்கை, அலை ஆகிய இரு இயல்புகள் இவ்வெண்ணக் கருவின் வளர்ச்சிக்கு உதவியது. அத்துடன் சடத்தின் அலைகள் கொண்டிருக்கும் $\lambda$ அலை நீளமானது $\lambda = h/mv$ ஆல் தரப்படும் எனவும் காட்டினார். இங்கு m எனபது துணிக்கையின் திணிவும் v என்பது துணிக்கையின் வேகமும் h என்பது பிளாங்கின் மாறிலியும் ஆகும். 1925 ஆண்டு டி புறக்கொலியின் கருதுகோலானது இலத்திரன்களை பளிங்குச் சாலகத்தில் புகவிட்ட போது கோணல் கோலவுருக்கள் அவதானிக்கப்பட்டது. இக் கோணல் கோலவுருவுக்கு ஒத்த அலை நீளம் மேலேயுள்ள சமன்பாடடில் உள்ள அலை நீளத்திற்கு ஒத்ததாக இருந்ததால் டி புறக்கொலியின் கருதுகோள் உண்மையாக இருந்தது. நுணுக்காட்டியினால் அவதானிக்கக் கூடிய மிகவும் சிறிய பொருளின் பருமனானது அண்ணளவாக அதை ஒளிரச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் கதிரின் அலை நீளத்திலும் அரைவாசியாகும்.ஒளி நுணுக் காட்டியில் துணிப்பு 200nm (2000A°)இற்கு எல்லைப்படுத்தப்பட்டதாக இருக்கும் இலத்திரனின் அலை இயல்பு காரணமாக இத்துணிப்பிலும் 1000 மடங்கு குறைவான துணிப்புள்ள நுணுக்குக் காட்டியை உருவாக்கலாம்.வெற்றிடமாக்கப்பட்ட அறையில் இலத்திரனை ஆர்முடுக்கி உயர் வேகத்திற்கு இலகுவாகக் கொண்டுவரலாம் என்பதால் அலை நீளம் $10^{10}$ m (1 A°) இலும் குறைவாக இருக்கும். அத்துடன் மின் புலத்தினாலும் காந்தப்புலத்தினாலும், இலத்திரனின் இயக்கத்தின் திசையை மாற்றலாம். இப்படியாகப் பொருத்தமான வடிவையுடைய புலங்கள் இலத்திரன்களுக்கு வில்லைகள் போல் செயற்படச் செய்யலாம். இலத்திரனின் சிறிய அலை நீளத்தையும் குவியப்படுத்த முடியுமாதலினால் ஒளி நுணுக்குக் காட்டியில் புலப்படும் பொருட்களைவிட 1000 மடங்கு சிறியதான பொருளையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இலத்திரன் நுணுக்குக் காட்டியின் அடிப்படைக் கட்டமைப்பு உரு (I) இல் காட்டப்பட்டுள்ளது.



உரு (i)

இலத்திரன், ஒளியியல் நுணுக்குக் காட்டிகளில் அடிப்படை கட்டமைப்புக்கள் ஒத்ததாகும். அவைகள் இரு வில்லைகளைக் கொண்டு இரு நிலை உருப்பெருக்கங்களை உருவாக்கப் படுகின்றன. வெப்பமான இழையினால் காலும் இலத்திரன்கள் ஆர்முடுகுவதுடன் நேர்வரிசையாக்கும் வில்லையானது தன்னுடு வரும் இலத்திரன் கற்கையை சமாந்தரக் கற்றைகளாக மாற்றும். சிறிய மாதிரியினூடு செல்லும் இக் கற்றை கோணலடைந்து செல்லும்.இது ஒளியியல் நுணுக்குக் காட்டியை ஒத்தது.ஆனால் இலத்திரனின் அலை நீளம் சிறிதாக இருப்பதால் மிகவும் சிறிய கட்டமைப்புள்ள மாதிரியினால் இலத்திரன்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும். பரவும் இலத்திரன்கள் பொருள் வில்லையினால் மெய் விம்பத்தை நோக்கி குவியப்படுத்தப்படும். இவ் விம்பம் மேலும் எறிவையினால் உருப் பெருக்கப்படும். இறுதி விம்பத்தை புளொர் ஒளித்திரையில் அவதானிக்கலாம்.தற்போது இலத்திரன் நுணுக்குக் காட்டியில் துணிப்பு $5\times 10^{-10}$ m (5A°) ஆகும்.இலத்திரன் வளியில் செல்லும் போது சிதறல் அடைவதால் நுணுக்குக் காட்டி வெற்றிட அறையைக் கொண்டிருக்க வேண்டும்.மேலும் அவதானிக்கப்படும் மாதிரியானது உலர்ந்ததாகவும் மெல்லியதாகவும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் இலத்திரன் நுணுக்குக் காட்டியினால் கலங்களின் கட்டமைப்பு , உயிரியல் செய்கைகள் DNA போன்ற பெரிய மூலக் கூறுகள் போன்றவைகளின் அழகான படங்கள் உரு (II) இல் காட்டியவாறு பெறப்படுகின்றன.


உரு (ii)

a) இலத்திரன் நுணுக்குக்காட்டியில் இலத்திரனை குவியப்படுத்துவதற்கு இலத்திரன்களில் உள்ள இயல்பைக் கூறுக.

b) ஒளியியல் நுணுக்குக்காட்டியிலும் பார்க்க இலத்திரன் நுணுக்குக் காட்டியிலுள்ள முக்கிய அனுகூலம் ஒன்றைக் கூறுக.

c) ஒளியியல் நுணுக்குக்காட்டியிலும் பார்க்க இலத்திரன் நுணுக்குக் காட்டிஉயர்துணிப்பைக்கொண்டிருப்பதற்கான காரணத்தைக்கூறுக.

d) பரிசோதனை இலத்திரனியல் நுணுக்குக் காட்டியின் முக்கிய பாகங்களின் செயற்பாடுகளைக் கூறுக.

e) i) துணிக்கையொன்றின் இயக்க சக்திக்கும் உந்தத்திற்கும் இடையிலான தொடர்புக்கான கோவையைப் பெறுக.இயக்கச் சக்தி எதிர் உந்தம் மாறுவதைக் காட்டுவதற்கான வரைபை வரைக.

ii) வினா (e) (i) ஐப் பயன்படுத்தி இயங்கும் துணிக்கையொன்றின் இயக்கச்சக்திக்கும் டி புறொக்லி அலைநீளத்துக்குமான தொடர்புக்கான கோவையைப் பெறுக.இயக்க சக்தி எதிர் டி புறொக்லி அலை நீளம் மாறுவதைக் காட்டுவதற்கான வரைபை வரைக.

f) $2\times 10^4\ ms^{-1}$ வேகத்துடன் செல்லும் இலத்திரனின் டி புறொக்லி அலை நீளத்தைக் காண்க.

g) இலத்திரன் கற்றை பளிங்கினூடாக செல்லும் போது கோணல் கோலங்கள் அவதானிக்கப்பட்டது. இக் கற்றையிலுள்ள இலத்திரனின் சக்தி $8.76 \times 10^{-16}$ j ஆகும்.

i) இக்கற்றையிலுள்ள இலத்திரனின் வேகத்தைக் காண்க.

ii) இக் கற்றையிலுள்ள இலத்திரனின் டி புறொக்லி அலை நீளத்தைக் காண்க.

iii) இவ் விலத்திரன் கற்றைக்குப் பதிலாக மாறா அலை நீளமுடைய x - கதிர் போட்டோன் கற்றை இப் பளிங்கினூடாகச் செல்லும் போது அதே சர்வசமானக் கோணல் கோலங்கள் அவதானிக்கப்பட்டது.

x - கதிர் போட்டோனில் உள்ள சக்தியைக் காண்க.

(h) இலத்திரனியல் நுணுக்குக் காட்டியின் திரையிலுள்ள ஹேக்சியஸ் DNA மூலக்கூறின் விட்டம் 2mm ஆகும்.உண்மையான DNA மூலக்கூறின் விட்டத்தைக் காண்க. (இலத்திரனியல் நுணுக்குக் காட்டியின் உருப் பெருக்க வலு $2 \times 10^5$ எறிவையின் உருப் பெருக்கவலு 5 உம் ஆகும்.

இலத்திரனின் திணிவு=9.11' $10^{-31}$kg, இலத்திரனேற்றம் =1.60' $10^{-19}$C,
ஒளியின் வேகம் =3.00' $10^8\ ms^{-1}$, பிளாங் மாறிலி=6.63' $10^{-34}$ Js

◆ ◆ ◆

# போதைப்பொருள் பாவனை இலங்கையில் மிக உச்சத்தில்

## அரசே பொறுப்பு; கர்தினால் ரஞ்சித்

(கொழும்பு)

**இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் நீதிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பலவீனமான நிலையினால் போதைப்பொருள் பாவனை மிக உச்சத்தில் இருந்து வருவதாக தெரிவித்த கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அரசாங்கமே இதற்கு காரணம் என்றும் குற்றம் சாட்டினார்.**

மதுபோதை என்ற காலனிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 30 ஆம் திகதி கம்பஹா ராகம பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர் வூட்டும் எதிர்ப்பு பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக தெளிவு படுத்தும் ஊடகவியலாளர்



சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கொழும்பு - பொறளையிலுள்ள கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வாசஸ் தலத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆண்டகை இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நாட்டின் அரசாங்கங்கள் அடிக்கடி மாறுகின்ற சந்தர்ப்பத்தில் சட்டதிட்டங்களிலும். அரசியலமைப்புக்களிலும் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களினால் ஜனநாயக மும், நீதிக்கட்டமைப்பும் பலவீனமடைந்து போவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பிரதிபலனாக இலங்கைக்குள் கொண்டுவரப்படுகின்ற போதைப்பொருட்களின் அளவு அதிகரித்திருப்பதாகவும். இதனால் நாட்டின் இளம் சமுதாயம் அழிவை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாகவும் ஆண்டகை எச்சரிக்கை விடுத்தார். (இ-10)

# கொத்தணிக்குண்டு குறித்து விசாரணை நடத்த வாய்ப்பு குறைவு-இந்திய ஊடகம்

(கொழும்பு)

இறுதிப் போரின் போது கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்துடன் சர்வதேச சமூகம் நட்புறவு பாராட்டி வருவதாகவும் இதனால் விசாரணைகளுக்கான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் குறைவு எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் உள்ளிட்ட இராஜதந்திரிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களும் இதனையே பறைசாற்றுகின்றன.

இவ்வாறான ஓர் நிலையில் கொத்தணிக்குண்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் மிகவும் அரிது என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

# அபிவிருத்தி செயற்பாடுகளில் படைகளுக்கே முன்னுரிமை

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பும் அமைதியைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் படைகளைக் காத்திரமான வகையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கையின் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இதற்காக. சிவில் - இராணுவ ஒருங்கிணைப்பு அமைப்பு ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.



இதற்கமைய முப்படைகளினது அறிவும் வளங்களும் நாட்டைக் கட்டியெழுப்பும் மற்றும் அமைதியைப் பேணும் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

புதிதாக உருவாக்கப்படவுள்ள தேச அபிவிருத்தி அமைப்பில் இலங்கை படையினர் முக்கிய பங்கு வகிக்கவுள்ளனர் என்று. அமைச்சரவையின் இணைப் பேச்சாளரான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (இ-10)

# 2017 இல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

2017 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் சந்திமவீரக்கொடி தெரிவித்துள்ளார். எதிர் வரும் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னதாக உள்ளூராட்சிமன்றத்தேர்தல் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை எதிர்நோக்க சுதந்திரக் கட்சி ஆயத்தமாக உள்ளது என அவர் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## விழிப்பாய் இருக்க வேண்டிய விடயம்

சிலர் தெரிந்தே பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைக்கிறார்கள்; குரங்கு கையில் பூமாலையைக் கொடுக்கிறார்கள்; கரும்புத் தோட்டத்திற்கு யானையைக் காவலாக வைக்கிறார்கள்.

இவை, நீ தவறு செய் –அவசியம் செய் என்று மறைமுகமாகத் தூண்டுவது போலாகும்.

மனிதன் மனத்தால் பலவீனமானவன். சபலப் புத்தி உள்ளவன். இதை அடைய வேண்டும்,அதை அனுபவிக்க வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் தன் தகுதியின் அடிப்படையில்தான் எழவேண்டும் என்று எண்ணாமல் , காண்பதையெல்லாம் அடைய ஆசைப்படுகிறவன்.

காவல் இருக்கும் வரை அவன் கட்டுப்பாட்டுடன் இருப்பான்.சத்திய சீலனாய் நடிப்பான்.காவல் தளர்ந்தால் வரம்புகளை மீறிவிடுவான்; கம்பி நீட்டிவிடுவான்.

ஒரு பெரிய தொகையைக் கொடுத்து வைத்துக் கொள்; அடுத்த மாதம் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அதன்படி போனால் அதைக் கட்டுப் பிரிக்காமல் திரும்பத் தர மிகச் சிலரால்தான் முடியும்.

நிறைய வரவு செலவு நடைபெறும் இடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விழிப்பாய் இல்லாவிட்டால் கையாடல் நடந்தே தீரும். அப்படி நடந்தால் முதல் குற்றவாளிகள் மேம்போக்காக இருந்தவர்களே தவிர , கையாடிப் பேர் வழிகள் இல்லை.

பெண்கள் விழிப்பாகப் பேசவும் எழுதவும் நடந்து கொள்ளவும் செய்யாவிட்டால், தவறாகக் கணக்குப் போட்டுக் கையைப்பிடித்து இழுக்கும் ஆண்கள் இருக்கிறார்கள். முதல் குற்றவாளிகள் இவர்கள் அல்ல. அப்படி எண்ண இடமளித்த பெண்களே முதல் குற்றவாளிகள்.

பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டிய வயதில் கண்காணிக்கத் தவறிவிட்டுத் தோளை மிஞ்சி வளர்ந்த பிறகு இனித் திருத்த முடியாது என்று நொந்து கொள்வதில் பயனேதும் இல்லை. விழிப்பற்ற பெற்றோர்களே ஊதாரிப் பிள்ளைகளும் உருப்படாத பிறவிகளும் தயாராக மறைமுக காரணமாகிவிடுகிறார்கள்.

நாம் முழுக் கவனத்தோடும் அக்கறையோடும் செயற்படுகிறோம் என்ற உணர்வு நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஏற்பட வேண்டும் அவர்களுடைய ஒவ்வோர் அசைவையும் நாம் கவனிக்கிறோம் என்ற நினைப்பும் பயமும் அவர்களுக்கு வர வேண்டும்.


சிறுசிறு சோதனைகள் மூலம் அவர்களுக்கு இலேசான அதிர்ச்சி வைத்தியம் தர வேண்டும்.அதே நேரத்தில் நாம் அவர்கள் மீது நம்பிக்கை அற்றுத்தான் அப்படிச் செய் தோம் என்று எண்ண இடம் தரலாகாது.

தங்கள் அலட்சியத்தாலும் கவனக்குறைவாலும் மெத்தனத்தாலும் கண்டும் காணாதிருந்தும் நமக்கென்ன வந்தது என்று இருந்தும் சிறிய தவறு முதல் பெரிய குற்றங்கள் வரை நடப்பதற்கு மறைமுகக் காரணமாக இருப்பவர்கள் தங்கள் செயலுக்காக வெட்கப்பட்டு , தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல எல்லாம் சரியானபடி நடக்க மூல காரணமாக இருந்து பெருமைப்பட வேண்டும்.

**லோ தமிழ்வாணன்**

# எங்கள் குருதேவர் பூஜ்யஸ்ரீ சிவகிருபானந்த சுவாமிகள்



பூஜ்யஸ்ரீ சிவகிருபானந்த சுவாமிகள் இருபத்தொராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு புண்ணிய புருஷர் ஆவார். அவர் சமர்ப்பணம் தியான வழிமுறையின் முன்னோடியாவார். முற்றாக தெய்வ உணர்வில் மூழ்கி அவர் இமாலயத்தில் இருந்து சமூகத்திற்கு பரிசுத்தமான விருப்புடன் எங்களை பிரபஞ்ச உணர்வுடன் இணைப்பதற்கும் அதில் அனுபவம் பெற வைப்பதற்குமாக இறங்கி வந்தார்.

இந்தியாவில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்து, சுவாமிகள் சிறிய வயதில் இருந்தே ஒரு மிக ஆர்வத்தை தொடர இருப்பினும் இயற்கை உணர்வில் அல்லது கடவுளிலும் காட்டி வந்தார். தன்னை சுற்றி உள்ள பல சமயிகளை வினவினார். இந்த அறிவைக் கண்டு கொள்ளவும் அறியவும் தேடித் திரிந்தார்.

இத்தேடுதலானது அவருடைய ஆரம்ப வாழ்க்கை முழுதும் தொடர்ந்தது. அவரின்தியானத்தில்மூன்று காட்சிகள் ஒழுங்காக அவருக்கு வரும். ஒன்று நேபாளத்தில் உள்ள பசுபதிநாத் ஆலயம். இரண்டாவது வெளிர்ந்த தலை முடி உடைய ஒரு துறவி. மூன்றாவது சிறிய குன்றில் அமைந்த ஒரு சிறிய ஆலயம். சுவாமி சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார். வர்த்தகக் கல்வியில் முதுமாணி படிப்பை பூர்த்தி செய்த இவர், கொல்கத்தாவில் உள்ள ஒரு பெரிய கொம்பனிக்காக சந்தைப்படுத்தும் முகாமைமாளராக வேலை பார்க்க ஆரம்பித்தார். பின்பு ஒரு நாள் அவர் தொழில் நிமித்தம் வட இந்தியாவுக்குப் போனார். அங்கே எதிர்பாராத விதமாக நடைபெற்ற வங்கி வேலை நிறுத்தம், இவரின் வர்த்தக செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தது. எனவே தமது நீண்ட நாள் ஆசையான காத்மண்டுவை தரிசித்தலை நிறைவேற்ற தீர்மானித்தார்.

அவருடைய வருகைக்கு அடுத்த நாள் அவர் பசுபதிநாத் ஆலயத்துக்குப் போனார். அவர் வந்த போது அவரை அணுகி வந்த ஒரு மூத்த மனிதரைச் சந்தித்தார். அவர் இவரின் பெயரைச் சொல்லி கதைத்து தாம் தமது குருவினால் இவரைச் சந்திக்கும் படி அனுப்பப்பட்டதாகவும் அவரின் குரு இவரை சந்திக்க மூன்று தினங்களாக காத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். தான் அவசர சூழலில் தீர்மானித்த பயணம் என்பதால் இதைப்பற்றி சுவாமிகள் ஆச்சரியப்பட்டார். மலைப் பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தை அடையும் மட்டும் இவர் அந்த மனிதனுடன் சென்றார்.

இவர் அந்த கிராமத்துக்கு வந்த போது, ஒரு பெரிய கல் ஒன்றில் அமர்ந்து காத்திருக்கும் படி சொல்லப்பட்டது. சூரிய அஸ்தமனத்தின் போது ஒரு உயர்ந்த, வெளிர்ந்த தலைமுடி உடைய துறவி அருகில் உள்ள குகையால் வெளியே வந்து இவரை அணுகினார். இந்தத் துறவியே சிவபாபா என அறியப்பட்டவராவர். சுவாமிகள் மிகவும் ஆச்சரியப்பட்டார். ஏனெனில் இவரை தான் அவர் நித்தம் தியானத்தில் கண்டு வருகின்றார்.


அவர் சிவபாபா. மிக உயரமாகவும் மெல்லியவராகவும் பொது நிறமுடையவராகவும் அவர் நீண்ட நேரம் பார்க்க முடியாத ஊடுருவும் நீலக் கண்களை உடையவராகவும் இருப்பதாக விபரிப்பார். சுவாமிகளை அவர் குகைக்குள் கூட்டிச் சென்று கொஞ்ச நீரை உருவேற்றி சுவாமியின் கைகளில் பருகும்படி ஊற்றினார். அவர் அதை பருகிய பின்பு மூன்று திணங்களாக தியான சமாதி நிலையில் இருந்தார். அவர் சமாதியால் எழுந்த போது குரு அவருக்கு தான் அவரை 40வருடமாக எதிர்பார்த்து இருப்பதாக கூறினார். அவர் தியான சமாதியில் இருக்கும் போது சிவபாபா தனது அறிவு, சக்தி எல்லாவற்றையும் அவருக்கு மாற்றம் செய்து விட்டதாக கூறினார். சிவபாபா 96 வயதாக இருந்தார். அவர் சொன்னார் தான் இவருக்கு தனது அறிவையும் சக்தியையும் வளங்கியதன் மூலம் தனது பணியை நிறைவு செய்வதாகவும் தான் இந்த வாழ்வை விடலாம் எனவும் கூறினார். அடுத்த தினத்தில் இறந்தார். அவருடைய இறுதிக்கிரியைகள் முடிந்தபின்பு சுவாமிகள் வீட்டுக்குத் திரும்பி முன்பு போல தனது வழமையான வாழ்வைத் தொடர்ந்தார். விவாகம் புரிந்து பிள்ளைகளும் இருந்தன.

பத்து வருடங்களுக்கு பின்பு வேறோர் புனிதமான ஆள், ஒரு மகாத்மா அவருடைய இல்லத்திற்கு வந்து அவருக்கு சொன்னார். இது தான் அவருக்கு அவருடைய ஆன்மீக பயணத்தை ஆரம்பிப்பதற்கான நேரமென சுவாமியின் மனைவியின் அனுமதியைப் பெற்ற பின்பு அவரை அந்த மகான் இமாலயத்திற்கு கூட்டிச் சென்றார். பல வருடங்களுக்கு மேலாக சுவாமிகள் ஒரு குழுவிடமிருந்து இன்னுமோர் குருவிடம் அழைக்கப்பட்டு ஒவ்வொருவரிடமும் அவர்களின் போதனைகளையும் சக்திகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வழி நடத்தப்பட்டார்.

இமாலயத்தில் சுவாமிகள் குருமார் சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள், கைவல்யா, கும்பகயோகிகள், புத்த சந்நியாசிகள், புனிதர்கள் வாய்மூலம் இன்றி தூர உணர்தல் மூலம் தொடர்பாடல் செய்யும் குருமாரென பலரோடும் தியானம் செய்தார். இமாலயத்தில் அவர் நிறைந்த ஞானத்தையும் அறிவையும் கண்டடைந்தார். நன்றாக ஞான நிலையை அடைந்தும் பிரபஞ்ச நிலையில் நிறைவாக மூழ்கியும் சுவாமிகள் இந்த தேகத்தில் தங்கி இருக்கிறார். சுவாமி அந்த நிலையில்இருக்கும்மற்றவர்களைப் போல் தன்னை சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர் திரும்பவும் சமூகத்திடம் யாரும் ஒருவர் பிரபஞ்ச உணர்வில் தன்னை இணைத்து அனுபவம் பெற தாம் ஒரு குழாய், ஒரு வழி, ஒரு கருவியாக செயற்படுவதற்காக வந்துள்ளார்.

# தமிழ் சினிமா வரலாறு

## “உயர்ந்த மனிதன்” வெற்றி விழா அறிஞர் அண்ணா பாராட்டு



உயர்ந்த மனிதனில் சிவாஜியுடன் சவுகார்ஜானகி சிவகுமார்

இந்த விழாவில் அண்ணா கலந்து கொண்டு என்னை வாழ்த்திப் பேச வேண்டும். என்னை விரும்பாத சிலர் அண்ணாவிடம் சென்று “விழாவுக்கு போகாதீர்கள். சிவாஜியை வாழ்த்திப் பேசாதீர்கள்'' என்று கூறியிருக்கிறார்கள்.

“ஆயிரம் தான் இருந்தாலும் சிவாஜி சிவாஜிதான். அவன் எனக்கு எப்போதுமே வேண்டியவன்தான். அவனைப் போல் அன்புள்ளவன் எவருமே கிடையாது” என்று கூறிவிட்டு அண்ணா விழாவுக்கு வந்துவிட்டார்.

### மாற்றான் தோட்டத்துக்கு மல்லிகை

உடம்பு முடியாதிருந்தும் அண்ணா அந்தக் கூட்டத்தில் முக்கால் மணி நேரம் பேசினார். “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்றார்.

மேலும் “இந்த மலர் மலர்ந்த பிறகுதான் நீங்கள் பார்க்கிறீர்கள்.இது மொட்டு விடும் போதே இது நன்றாக அரும்பி வாசனை கொடுக்கும் என்று எனக்குத்தெரியும்'' என்றும் கூறினார். அதன்பின் கணேசா! என் அருமைத் தம்பி! நீ எங்கிருந்தாலும் வாழ்க என்று மனம் திறந்து வாழ்த்தினார்.

“பெருமாள் முதலியார் கூட்டிக் கொண்டு வந்ததினால் கணேசன் திரையுலகுக்கு சீக்கிரம் வந்து விட்டான். இல்லை என்றாலும் நிச்சயம் இரண்டு ஆண்டுகள் கழித்து சிவாஜிகணேசன் சினிமாவுக்கு வந்திருப்பான். அவனுடைய வரவை யாராலும் தடுத்திருக்க முடியாது” என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்குப்பின் அண்ணா அவர்கள் தி.நகரில் கலைவாணர் என்.எஸ்.கே. சிலையை திறந்து வைத்தார். அதன்பின் சில நாட்கள் கழித்து அண்ணா மறைந்து விட்டார். நான் “சிவாஜி'' ஆவதற்கு வழி வகுத்துத்தந்த அந்த மாமேதையின் மறைவு என்னை எப்படி பாதித்தது என்பதை வெறும் வார்த்தைகளால் கூறமுடியாது.

நான் ‘நாடகங்களிலும் படங்களிலும் தமிழைப் பேசும் போதெல்லாம் அந்த தமிழ்ச் செல்வரின் நினைவு வரும். அவர் என்னுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே எண்ணி சமாதானப்படுவேன்”

இவ்வாறு சிவாஜிகணேசன் குறிப்பிட்டுள்ளார்.

சிவாஜிகணேசனின் தாயார் ராஜாமணி அம்மாள் தனது 72வது வயதில் காலமானார்.

சிவாஜியின் வெற்றிப்படங்கள் வரிசையாக வெளிவந்து கொண்டிருந்த காலகட்டம் அது.

1969 இல் அன்பளிப்பு, தங்கச்சுரங்கம், காவல் தெய்வம், குருதட்சணை, அஞ்சல் பெட்டி 520, நிறைகுடம், தெய்வமகன், திருடன், சிவந்த மண் ஆகிய 9படங்களில் நடித்தார்.

1970இல் நடித்த படங்கள்: எங்கமாமா,விளையாட்டுப் பிள்ளை,வியட்நாம் வீடு, எதிரொலி, ராமன் எத்தனை ராமனடி, எங்கிருந்தோ வந்தாள், சொர்க்கம், பாதுகாப்பு.

1971 இல் நடித்த படங்கள்: இரு துருவம், தங்கைக்காக, அருணோதயம்,குலமா குணமா, பிராப்தம், சுமதி என் சுந்தரி, சவாலே சமாளி,தேனும் பாலும், மூன்று தெய்வங்கள், பாபு.

1972 இல் நடித்த படங்கள் ராஜா,ஞானஒளி,பட்டிக்காடா பட்டணமா,தர்மம் எங்கே, தவப்புதல்வன்,வசந்த மாளிகை, நீதி.

### காவல் தெய்வம்

நடிகர் எஸ்.வி.சுப்பையா சொந்தமாக தயாரித்த படம் காவல் தெய்வம். இதில் எஸ்.வி.சுப்பையா, சவுகார் ஜானகி,சிவகுமார் ஆகியோர் நடித்தனர். கதை-வசனம் ஜெயகாந்தன்.

சாமுண்டி சிராமணி என்ற முக்கிய கதாபாத்திரத்தில் சிவாஜி நடித்தார். கௌரவ வேடம்.யாரும் எளிதில் மறக்க முடியாத விதத்தில் அந்த பாத்திரத்துடன் ஒன்றி நடித்தார்.

### மூன்று வேடம்

சிவாஜிகணேசன் மூன்று வேடங்களில் நடித்த படம் ‘தெய்வமகன். ஆரூர்தாஸ் வசனம் எழுத, ஏ.சி. திருலோகசந்தர் டைரக்ட் செய்தார். இசை:எம்.எஸ். விஸ்வநாதன்.

அப்பாவாகவும் 2 மகன்களாகவும் சிவாஜி சிறப்பாக நடித்தார்.ஒஸ்கார் பரிசுக்கு இந்தியாவின் சார்பில் அனுப்பப்பட்ட படம் இது.

(தொடரும்)

# அடுத்து நான் கைதாவேனோ! ரோஹித ராஜபக்ஷ அச்சத்தில்



தன்னையும் அதிகாரிகள் கைது செய்து சிறையிலிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - புதிய மகசின் சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை சந்திப்பதற்காக அவரது உறவினர்களும், ஆதரவாளர்களும் அங்கு சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை புதிய மகசின் சிறைக்குச் சென்ற ரோஹித ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இந்த அச்ச நிலையை வெளிப்படுத்தினார்.

அத்துடன் இந்த சிறையில் மகிந்த ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரும் அடைக்கப்பட்டிருந்ததோடு, எதிர்வரும் சில தினங்களில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் வரவுள்ளதாக அறியக்கிடைத்தது என்றும் ரோஹித ராஜபக்ஷ கூறினார்.

சிறையிலும் நாமல் ராஜபக்ஷ மகிழ்ச்சியாகவே காலத்தை கழித்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# இலங்கையில் ஐ.எஸ். உளவுப்பிரிவினர் உசார்

(கொழும்பு)

**ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் ஊடுருவல் தொடர்பில் உளவுப் பிரிவினர் உசார்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர, பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.**

இந்திய ஊடகம் ஒன்றில் வெளியான செய்தியில் ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொள்வதாக 3 இளைஞர்கள் இலங்கையில் சமயக் கல்வி கற்பதற்காக செல்வதாக அவர்களின் உறவினர்களிடம் தெரிவித்து சென்றுள்ளனர் என்றும், கேரளாவிலிருந்தே இவர்கள் ஊடுருவியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீரவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது.

இவ் விடயம் தொடர்பில் விரிவாக எதனையும் கூற முடியாது. அதேவேளை எமது உளவுப் பிரிவினர் உசார்படுத்தப்பட்டுள்ளனர். எனவே எதற்கும் அச்சமடையத்தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# பல்கலை.பணியாளர்களுக்கு 2500 ரூபா சம்பள அதிகரிப்பு

## உயர்கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபாய் மாத சம்பளத்தை பல்கலைக்கழகங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கான சுற்றறிக்கையினை வெளியிடுவதற்கு உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் அலுவலக பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது எல்லையானது 57 இல் இருந்து 60 வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான விசேட கொடுப்பனவாக 20 வீதத்தை ஊழியர் சேமலாப நிதியில் வைப்பிலிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பீ.ஜீ.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் பழிவாங்கல்களினால் பிரச்சினைகளை எதிர்கொண்ட பல்கலைக்கழக அலுவலக சபை அதிகாரிகளுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கவும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், இன்னும் இரண்டு வாரங்களில் குறித்த நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (இ-10)

# மஞ்சள் கடவையில் விபத்து; பொலிஸ் அதிகாரி பணிநீக்கம்

கடமைக்கு உரிய நேரத்தில் சமுகமளிக்காது தம்புள்ளையில் ஒரு விபத்து ஏற்பட காரணமான பொலிஸ் அதிகாரியொருவர் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ளை நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்கள் சிலர் வீதியின் மஞ்சள் கடவையில் விபத்துக்குள்ளாகினர். இதன்போது அங்கு கடமையிலிருக்க வேண்டிய பொலிஸ் அதிகாரி சமுகமளித்திருக்காத நிலையில் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

காலை 6.00 மணிக்கு கடமைக்கு சமுகமளித்திருக்க வேண்டியதம்புள்ளைபொலிஸ் இன்ஸ்பெக்டரான சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி மேற்படி விபத்து இடம்பெறும் போது கூட கடமைக்குத் திரும்பியிருக்கவில்லை என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தம்புள்ளை நகரில் தம்புலிகம மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள மஞ்சள் கடவையில் இடம்பெற்றுள்ளது.வீதியில் வேகமாக வந்த "கெப்" வண்டி மோதியதில் அந்த பாடசாலையில் 6 மற்றும் 7 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் மூன்று மாணவச் சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்ற வேளையில் ஒரு பொலிஸ் அதிகாரி அங்கு கடமையிலிருந்துள்ளார். எனினும் சம்பந்தப்பட்ட தம்புள்ளை பொலிஸ் தலைமையக குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் அங்கு கடமைக்குச் சமுகமளித்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 779

Search for people, places and things | Nagendram | Home

### றொசானி




### நிசாந்தன்




### அச்சு

கணவன்: பசிக்குதுடி சாப்பாடு ரெடியா?
மனைவி: கொஞ்சம் இருக்க.. Photo எடுத்து Facebook ல போட்டுட்டு வாரேன்...
(சிறிது நேரம் கழித்து)
கணவன்: என்னடி சாப்பாடு நல்லாவே இல்லை
மனைவி: நல்லா இல்லையா? எனக்கு 55Like வந்திருக்கு..

### வவி




### றஜீவன்




### பூஜா உமாசங்கர்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சரத் பொன்சேகா அமைச்சு பணிகளை பொறுப்பேற்றார்



பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இன்று தனது அமைச்சு பணிகளைப் பொறுப் பேற்றார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள அமைச்சில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மற்றும் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்ரம, சாகல ரத்நாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-15.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.22 | 147.86 |
| பிரிட்டன் | பவுண்ட் | 189.02 | 195.43 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.21 | 165.27 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.66 | 151.51 |
| கனடா | டொலர் | 110.75 | 115.15 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 108.99 | 113.87 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.59 | 110.51 |
| இந்தியா | ரூபா | 2.1678 | ------- |
| சீனா | யுவான் | 21.7185 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.6897 |
| ஓமான் | ரியால் | 377.2237 |
| கட்டார் | ரியால் | 39.8863 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7302 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5443 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 110 | 160 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 80 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 1000 | 600 | 600 | 600 | 800 | 500 |
| தக்காளி | 180 | 200 | 140 | 170 | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| கோவா | 160 | 200 | 120 | 180 | 140 | 160 | 150 |
| கரட் | 200 | 300 | 150 | 240 | 200 | 240 | 200 |
| பூசணி | 120 | 200 | 140 | 120 | 140 | 200 | 150 |
| புடோல் | 80 | 100 | 60 | 70 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 150 | 100 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 110 | 120 | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 200 | 240 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 100 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 150 | 200 | — | 180 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 140 | 120 | 80 | 200 | 120 | 100 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 140 | 160 | 160 | 160 | 140 |
| பீற்றூட் | 140 | 200 | 100 | 120 | 150 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 320 | 300 | 240 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 400 | 400 | 320 | 500 |
| போஞ்சி | 200 | 200 | 130 | 160 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்பள்ள | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 50 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 120 | 200 | 120 | 160 | 150 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 400 | 250 | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 140 | 200 | 240 | 240 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 120 | 30 | 60 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கொழும்பு நகரில் தமிழ் எம்.பி.சுட்டுக்கொலை 228

**கொழும்பில் குண்டு வெடித்தது**

முல்லைத்தீவு அருகே இராணுவம் நடத்திய கொடூர தாக்குதலின் பரபரப்பு அடங்குவதற்குள் பிற்பகல் ஒரு மணி யளவில் கொழும்பில் பயங்கர குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

பாகிஸ்தான் தூதர் பஷீர் வாலி முகமது மற்றும் அதிகாரிகள் பாகிஸ்தான் சுதந்திரதின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த ஓர் ஆட்டோ ரிக்ஷாவுக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த கண்ணிவெடி பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில் இராணுவ வீரர்கள் உட்பட 3 பேர் பலியானார்கள் 17 பேர் படுகாயம் அடைந்தனர்.

**உயிர் தப்பினர்**

ஆனால் பாகிஸ்தான் தூதர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினார். அவரது காரும் பின்னால் பாதுகாப்புக்கு வந்த ஜீப்பும் சேதம் அடைந்தன.

இராணுவத்துக்கு ஆயுத பரிமாற்றம் செய்ய பாகிஸ்தான் முடிவு செய்து இருப்பதால் ஆத்திரம் அடைந்த விடுதலைப்புலிகள் இந்த தாக்குதலை நடத்தியதாக கூறப்பட்டது.

**யாழ்ப்பாண நகர்**

இதற்கிடையே யாழ்ப்பாண நகரைக்கைப்பற்ற விடுதலைப்புலிகள் கடும் போர் புரிந்தனர். இதில் ஒரு கட்டமாக யாழ்ப்பாணத்தை அடுத்த பலாலி விமான நிலையத்தைக் குறிவைத்து விடுதலைப்புலிகள் ஏவுகணைகளால் 17-08-2006 அன்று ஆவேசத்தாக் குதல் நடத்தினார்கள். இதில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று சேதம் அடைந்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலாலி விமான நிலையம் பலத்த சேதம் அடைந்தது. தொடர்ந்து விடுதலை புலிகள் தாக்குதல் நடத்தி வருவதால் அங்கு இராணுவ விமானங்கள் இறங்கமுடியவில்லை.

**தாக்குதல்**

யாழ்ப்பாணம் நகரின் வடக்கு பகுதியிலும் முகமாலை, கிளாலி ஆகிய முனைகளிலும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினார்கள். இதில் இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாண நகரில் வடக்கு பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் மீது 17ஆம் திகதி அதிகாலை விடுதலை புலிகளின் கடற்படை பிரிவு வீரர்கள் தளபதி சூசை தலைமையில் தாக்கினார்கள். படகுகளில் பாய்ந்து வந்து அவர்கள் மீது இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கியாலும் பீரங்கியாலும் சுட்டார்கள்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் விடுதலைப்புலிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டது. இதில் 70 இற்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் இறந்தனர். இராணுவத்தினர் 6 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயம் அடைந்தனர் . ஒரு வாரமாக நடந்த போரில் இராணுவத் தினர் 106 பேர் உயிரிழந்தனர் என்று இராணுவ செய்தி தொடர்பாளர் கூறினார்.

**நோர்வே தூதுக்குழு வெளியேறியது**

இந்த நிலையில் நோர்வே தூதுக்குழுவில் இடம்பெற்றுள்ள பிரதிநிதிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் 60 பேர் திருகோணமலையை விட்டு வெளியேறினார்கள்.' அவர்கள் அலுவலகத்திற்கு மிக அருகே இராணுவத்தினர் செலுத்திய பீரங்கி குண்டுகள் வந்து விழந்ததே இதற்கு காரணம்.

இது குறித்து நோர்வே தூதுக்குழுவினர் கூறுகையில், திருகோணமலையில் எங்களுக்கு பாதுகாப்பு இல்லை. எனவே கொழும்பு செல்கிறோம் என்றனர்.

சமரச குழுவில் இடம் பெற்றுள்ள பிரதிநிதி ஹென்ரிக்சன் கூறுகையில், இது வித்தியாசமான தீவு. இதே நிலை நீடித்தால் யாரும் வெற்றி பெறப் போவது இல்லை என்றார்.

◆ ◆ ◆ ◆ ◆

கொழும்பு நகரில் தமிழ் எம்.பி.நடராஜா ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கையில் 4 கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசிய கூட்டணியை அமைத்து தேர்தலில் போட்டியிட்டன. இந்தக் கூட்டணி விடுதலைப்புலிகளின் ஆதரவு அரசியல் இயக்கமாகும். இந்தக் கூட்டணி சார்பில் சாவகச்சேரி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டவர் நடராஜா ரவிராஜ். வயது 44. சட்டத்தரணியான நடராஜா ரவிராஜ், யாழ்.மாணகரசபையின் மேயராகவும் பதவி வகித்தவர். இராணுவத்தின் அத்துமீறல்களை கண்டித்து தமிழர்களுக்காக அவர் தீவிரமாக குரல் கொடுத்து வந்தார்.

**சுட்டுக்கொலை**

இந்த நிலையில் 10-11-2006 அன்று காலை 8 மணியளவில் கொழும்பு நகரின் மர்ம மனிதன் ஒருவனால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு பொரல்ல பகுதியில் உள்ள அவருடைய வீட்டுக்கு அவர் காரில் திரும்பினார். மீண்டும் வீட்டில் இருந்து காரில் வெளியே புறப்பட இருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவன் மிக குறைந்த தூரத்தில் இருந்து ரவிராஜை துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பி ஓடிவிட்டான்.


இந்தத் தாக்குதலில் ரவிராஜின் மெய்க்காப்பாளர் லக்ஸ்மன் அந்த இடத்திலேயே பலியானார். தலையில் குண்டு பாய்ந்து உருகிப் போராடிய எம்.பி. ரவிராஜ் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிறிது நேரத்தில் மரணம் அடைந்தார். அவருக்கு மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர்.

**ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸ் விசாரணை**

நடராஜா ரவிராஜ் படுகொலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் கண்டனம் தெரிவித்தார். இந்தச் சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்தும்படி பொலிஸ் ஐ.ஜிக்கு அவர் உத்தரவிட்டார்.

அத்துடன் அந்த விசாரணைக்கு உதவும் படி இங்கிலாந்தின் ஸ்கொட்லாந்து யார்டு (உலகின் சிறந்த புலன் விசாரணை அமைப்புக்களில் ஒன்று) பொலிஸாரைக் கேட்டுக்கொள்ளும்படி வெளியுறவு அமைச்சகத்துக்கு அவர் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் தமிழ் எம்.பி. படுகொலைக்கு அமெரிக்காவும் கண்டனம் தெரிவித்தது. இது பற்றி உடனடி விசாரணை தொடங்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க தூதரகம் கேட்டுக் கொண்டது. (தொடரும்)



சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் எம்.பி.யின் மனைவி, மகன் மற்றும் மகள் சோகமாக இருக்கும் காட்சி.

# வடக்கு-கிழக்கு முதலமைச்சராக முஸ்லிம் ஒருவரை ஏற்கத் தயார்

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

**இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக, படித்த, பக்குவமான முஸ்லிம் ஒருவரை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டுமென திடமாக வலியுறுத்தி வருகிறோம்.

அதனை முஸ்லிம் தலைவர்களும் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு தமிழர்தான் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதற்காக நாம் அவ்வாறு கூறவில்லை.

ஒரு பக்குவமான, படித்த முஸ்லிம் நபரை எமது முதலமைச்சராக ஏற்றுக் கொள்வதற்கு நாம் தயாராகவிருக்கிறோம்.

நியாயமான, நிரந்தரமான முடிவொன்றை எட்டுவதற்கு அனைத்துலக பங்களிப்பை எவரும் மறுக்க முடியாது. உண்மை கண்டறியப்பட வேண்டும். உண்மையின் அடிப்படையில் நீதி வழங்கப்பட வேண்டும். மீண்டும் நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதனடிப்படையில் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். அதுவே உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை எவரும் குழப்பாது பொறுமை காக்க வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்தில் இருந்து சமூக விரோதிகளால் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பொழுது இந்த நாட்டுக்கு உரித்துடைய தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் சட்டம்,ஒழுங்கு பேணப்படவில்லை. அது பாரதூரமான குற்றமாகும்.

இந்த நாட்டை விட்டு இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறினார்கள். தமிழ் மக்களில் அரைப்பங்கினர் இலங்கைக்கு வெளியே வாழ்கின்றார்கள். இந்தியாவில் மட்டும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்பக்கூடிய நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாம் பெரும்பான்மை மக்களை எதிர்க்கவில்லை. அவர்கள் எமது சகோதரர்கள். நாமும் அவர்களும் சமத்துவமாக வாழவேண்டும். நாம் இரண்டாம் தரக் குடிமக்களாக வாழ முடியாது.

இறைமையின் அடிப்படையில் எமது அபிலாசைகளை ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதுவே எமது நிலைப்பாடு. புதிய அரசியலமைப்பின் ஊடாகவே தற்போதுள்ள நிலையிலிருந்து நாட்டை மீட்க முடியும்.

தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏறபட்டிருக்கிறது. அந்தச்சநதர்ப்பத்தை நாம் எல்லோரும் பயன்படுத்த வேண்டும். ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாம் எதிர்பார்த்தளவில் கருமங்கள் வேகமாக நடைபெறாது விட்டாலும் கூட முன்னேற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

நியாயமான, நிரந்தரமான நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வு, அரசியலமைப்பு ரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு எமது முழு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராகவிருக்கிறோம்.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக காத்திருக்கின்றனர். அவர்கள் மீண்டும் ஏமாற்றப்பட முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினை அனைத்துலக மயப்படுத்தப்பட்டிருக்கிறது. அனைத்துலகத்தின் கண்காணிப்பு தொடர வேண்டுமென எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நட்சத்திரங்களுக்கு இடமில்லை

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பிரபல நட்சத்திரங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடச் செய்யாது என கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,


மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தலின் போது திரைப்பட நடிகர்கள், பாடகர்கள் உள்ளிட்ட பிரபல நட்சத்திரங்களை இம்முறை கட்சி உள்ளீர்த்து போட்டியிடச் செய்யாது.

மாறாக, மக்களுக்கு நெருக்கமான, மக்களுடன் இணைந்து செயற்படக் கூடிய மதிநுட்பமானவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட தெரிவு செய்யப்படுவார்கள்.

மக்களின் வாக்குகளை பிரபல நட்சத்திரங்கள் கொள்ளையிட்டுச் செல்ல அனுமதிக்கப்படாது.சில பிரபல நட்சத்திரங்கள் தேர்தலில் போட்டியிட்டதன் பின்னர் நடந்து கொள்ளும் விதம் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல்வாதிகளின் உறவினர்கள், பிள்ளைகள், மனைவியர் போன்றவர்கள் தேர்தலில் போட்டியிடச் செய்யப்பட்டனர்.

எதிர்வரும் தேர்தலில் இந்த உறவினர்களுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பு மனு வழங்கப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில முக்கிய முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மகிந்த தரப்பில் இணைந்து தேர்தலில் போட்டியிட முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ-10)

# செய்தித்துளிகள்

## பதிவு இல்லாத தொலைபேசி வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்க முடிவு

பதிவு செய்யப்படாமல் உள்ள கைத்தொலைபேசி மற்றும் தொலைபேசி உபகரணங்கள் விற்பனையில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த மாதத்தின் இறுதியில் நாடளாவிய ரீதியில் குறித்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த வர்த்தக நிலையங்களை பதிவு செய்வதற்கு 3 மாதம் கால எல்லை வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## 'ஆறிப்போன காயங்களின் வலி' கொழும்பில் கலந்துரையாடல்

முன்னாள் பெண் போராளியான வெற்றிச்செல்வியின் "ஆறிப்போன காயங்களின் வலி" நூல் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்புமுகாம் வாழ்வு தொடர்பான ஒரு வரலாற்றுப் பதிவாக இந்தநூல் வெளிவந்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 18 வருடங்கள் களச் சமர் புரிந்து ஒரு கையையும் ஒரு கண்ணையும் இழந்தும் மனம் தளராத வெற்றிச்செல்வி இதுவரை ஆறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். (இ-10)

## மோதலில் ஒருவர் பலி; ஆறுபேர் படுகாயம்!

ஹங்குரங்கெத்த ஹேவாஹெட்ட துல்கந்துர பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில், மாரிமுத்து (வயது- 57) என்பவர் உயிரிழந்துள்ளதுடன் பெண்ணொருவர் உட்பட 6 பேர் படுகாயமடைந்த நிலையில், ரிகில்கஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் துல்கந்துர பிரதேசத்தைச் சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த அறுவரும் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-10)

# பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம்,மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம்,ஆங்கிலம் உள்ளடங்களாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.


விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர்,முகவரி,பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம்,கல்வித்தகைமைகள்,தொலைபேசி இலக்கம்,பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட அலுவலகர்,NAITA,இல 44,சோமசுந்தரம் வீதி,சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.07.2016இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும்.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (ICTT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ-5)

# அரசாங்கம் நல்லாட்சிக்கான தனது விருப்பினை நிரூபிக்குமா?

மொத்த எண்ணிக்கையாக 222 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக இணைந்த எதிர்க்கட்சி கொண்டு வந்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் ஆளுங் கட்சியின் மைத்திரி-ரணில் இணைத்தலைமை 145-51 என்ற விதத்தில் தனது எண்ணிக்கைப் பலத்தை நிரூபித்துக்கொண்டது. இதற்கு முந்திய பாராளுமன்ற அமர்வில் அமைச்சர் கருணாநாயக்க இதேபோன்ற தொரு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருந்தார். பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு ஆணை பிறப்பிப்பது என்ற தனது முன்னைய வாக்குறுதி தாமதித்த நிலையிலும் அதனைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்



கொண்டிருந்ததன் மூலம் அரசுக்கு மேற்படி ஏற்படவிருந்த அந்த சங்கடமான தொரு அச்சுறுத்தல் நிலையையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தவிர்த்துக் கொண்டவராகவே இருந்தார். இருப்பினும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்குரிய அதிகாரப் பரவலாக்கம், மீள் இணக்கப்பாடு போன்ற ஜனநாயக உரிமைகள் மட்டில் புதிய அரசியலமைப் போன்று கருத்திற் கொள்ளப்படும் போது அதற்கான வாக்கெடுப்பின் பெறுபேறுகள் முன்னையது போல் அதே விதமாக இருக்காது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தற்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் புறம்பாக 16 தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு உறுப்பினர் உள்ளடங்கலாக அன்றுவாக்களிப்புக்கு வராதவர்கள் 28 பேர்களாகும். மேற்குறிப்பிட்ட முதல் இருவரிலும் பின்னையவர் அரசியல் மீள் இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுக்கு ஆதரவாகக் கட்டாயம் வாக்களிக்க வேண்டிய ஒருவரேதான்.

இவ்விதமாக புதிய தொரு அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட 2/3 பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படும். இது அரசியலமைப்பில் முக்கிய திருத்தங்களோ, புதிய மாற்றங்களோ, உள்ளீடுகளோ உள்ளடக்கப்படாத விதத்திலேயாகும். புதிய அரசியலமைப்பு வரைபுக்கென தயாரிக்கப்பட்டுவரும் சில சரத்துக்களுக்கும் 9 மாகாண சபைகளதும் பெரும்பான்மை ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அதனை மீளவும் அமைப்பதற்குப் புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும். ஏனைய விடயங்களுக்கு தேசிய கருத்துக்கணிப்பு வேண்டும். புதிய தொரு அரசியலமைப்பு முழுமையாகவோ, பகுதியாகவோ நிறைவேற்றப்படுவதற்கும் அவை முழுமையாகவோ பகுதிகளாகவோ நீதிமன்ற பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

நிதியமைச்சர் கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகப் பாராளுமன்ற த்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதை மீளவும் உறுதிப்படுத்திக் கொண்டார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த தனது ஆட்சியில் நிதியமைச்சுப் பொறுப்புக்களையும் தாமே தன்வசம் கொண்டிருந்து திறைசேரிப் பொறுப்புச் சட்டத்தின் சரத்துக்களையும் துஷ்பிரயோகம் செய்ததற்காக அவரை ஒரு வாரகாலத்திற்கு பாராளுமன்ற நடவடிக்கைகளிலிருந்து நிறுத்தி வைக்க வேண்டுமென்று தமது உரையினிடையே மகிந்தவை ரணில் சீண்டியிருந்தார். இதனை அவர் தொடர்ந்து முன்னெடுக்கிறாரோ இல்லையோ அது வேறு விடயம். ஆனாலும் தமது கணிப்பை அவர் நிரூபித்துக் கொண்டார். அதாவது தமது அரசாங்கம் இப்போது பெரும்பான்மை ஆதரவினைப் பெற்றுக் கொண்டிருப்பதுடன் நம்பிக்கையையும் தக்கவைத்துக்கொள்ளும் என்பதே அவரது கணிப்பாக இருந்தது.

பாராளுமன்றத்தில் இப்போது அதிகாரபூர்வ எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இனப் பிரச்சினைக்கான அரசி யல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் மட்டிலான தீர்வுகளுக்கு அனைத்துக் கட்சிகளுடனான பேச்சு வார்த்தை என்றில்லாமல் இருதரப்பு பேச்சுவார்த்தை மட்டுமே தேவையென முன்னைய மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் பிடிவாதமாகவே கூறி வந்தது. ஆளும் கட்சிக் கூட்டணிக்கு 2/3 பெரும்பான்மைப்பலம் இருந்த தால் மகிந்த ராஜபக்ஷ தலைமையானது தான் நினைத்தவாறு தீர்மானிக்கும் எதனையும் சாதித்து விடலாமென்றிருந்தது. இந்தத் தடவையுங்கூட அதிகாரப் பரலாக்கம் அல்லது எதுவித தீர்வு வடிவங்களோ முறைகளோ அவை மட்டிலான சரத்துக்களோ அரசியலமைப்பு உள்ளீடுகளோ பற்றி புதிய அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆலோசித்ததாக தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புங்கூட தீர்வுக்கான இந்த இருவித அம்சங்கள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் மௌனம் காத்து வருகிறது. பொறுப்புக்கூறல் விடயங்களோவென்றால்



மகிந்த ராஜபக்ஷ ஆட்சி யின் போது இல்லாத விதத்தில் உள்ளார்ந்த சிங்கள அரசியல் கூச்சல்- குளறுபடிகள் மத்தியில் அமிழ்ந்துபோய் சப்தமற்ற வெறும் முனகல் போதலாயிற்று.

**ஒன்றுபட்ட முயற்சி**

ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் 30/1 ஆம் தீர்மானமான பொறுப்புக்கூறல் விசாரணை மட்டில் இலங்கை கொண்டுள்ள கடப்பாட்டினை அது நடைமுறைப்படுத்துவதற்கான இடைக்கால நீதிபற்றி விரிவான ஒரு மூலோபாய மொன்றுக்கு அதன் ஆணையாளர் செய்ட் ராட் அல்ஹூ சேன் ஜெனிவாவின் 32 ஆவது UNHRC அமர்வின் போது அறைகூவல் விடுத்திருந்தார். இந்தவித மூலோபாயமானது இலங்கை தனது கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான வெவ்வேறு வழிமுறைகள் ஒருங்கிணைக்கப்பட்டதும் பொருத்தமான ஒழுங்கு ரீதியிலும் உள்ளார்ந்த விதமாகவும் தேடிக் கொள்வதற்கு உதவுவதாக இருக்கவேண்டுமெனவும் அதற்கு இலங்கையர்களனைவரதும் ஒருங்கிணைந்த விதமான அர்த்தமுள்ள ஈடுபாடு- ஆர்வம் தேவைப்படும் என இளவரசர் செய்ட் கூறியது மட்டுமல்லாமல் இதற்கான ஒரு வாய்மூலவழிகாட்டி நிரல் ஒன்றினை அமர்வுகளின் பிந்திய கட்ட த்தில் தருவதாகவும் கூறினார்.

> சண்டே லீடர் பத்திரிகையின் "தனது எண்ணிக்கைப் பலத்தை நிரூபித்த அரசாங்கம் நல்லாட்சிக்கான விருப்பத்தையும் நரூபிக்குமா?" என்ற தலைப்பில் என். சத்திய மூர்த்தி எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.

ஒவ்வொரு வருடத் திலும் இடம்பெற்று வரும் ஜூன் மாத அமர்வுக்கென்றே தீர்மானிக்கப்பட்டபடி விடுக்கப்படும் அவரது இந்த வாய்மூல அறிக்கையின் ஒரு பகுதியானது UNHRC தலைவரது அவதானிப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதாயிருக்கும். அதே வருடத்தின் மார்ச் மாத முதல் அமர்வுக்குப் பின்னர் வரும் ஜூன் மாத அமர்வைத் தொடர்ந்து வரும் செப்டெம்பர் மாத அமர்வுகளிலேயே தீர்மானங்கள் கொண்டு வருவதும் நிறைவேற்று வதும் நடைபெறும். வெவ்வேறு நாடுகள் விடயங்களிலும் இவ்விதமே நடைபெறும். இலங்கை விடயத்தில் அதற்கான இடைக்கால நீதி பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இரு



தரப்புகளும் கடந்த வருடத்தில் இணைந்த விதமாக ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டையே நிறைவேற்றுவதற்கு இப்போது மற்றுமொரு மூலோபாயம் தேவைப்படுகிறது.

இந்தக் கால நீடிப்பென்பது UNHRC ஐப் பொறுத்த மட்டில் மன்னிக்கவோ மறக்கவோ முடியாத ஒரு இழுத்தடிப்பேயாகும். அதாவது இன மீள் இணக்கப்பாடும் பொறுப்புக்கூறல் (நம்பகமான) இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களேயாகும். ஒன்றுக்குப் பதில் மற்றது ஈடாகி விடாது. இரண்டும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவும் இணைவாகவும் செயற்படுபவையே. நிதியமைச்சர் கருணாநாயக்கவுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மேற்படி விடயங்களை தாமதப்படுத்துவதற்கான காரணியாகக் கொள்ளப்படலாகாது. நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பே UNHRC தீர்மான நடைமுறைப்படுத்தலை தாமதிப்பதற்கான காரணமாக கொள்வது தவறு. தீர்மாணம்/வாக்கெடுப்பு பெறு பேறுகள் இரண்டிலும் மாற்றமில்லை.

பாராளுன்ற பெரும்பான்மைப் பலம் மீதான அரசாங்கத்தின் நம்பிக்கையுடன் அரசியல் தீர்வொன்றுக்கான அதனது எந்தவொரு வாக்குறுதியும் பொறுப்புக் கூறலுக்கான ஒரு மாற்றாகிப் போய் விடாது. மறுவளமாகப் பார்த்தால் பொறுப்புக்கூறல் சாராத ஒருவித அரசியல் இணக்கப்பாட்டிற்கு முன்னரே இடைக்கால நீதி ஒழுங்கு முறைபாராளுமன்றத்தில் முன்வைக்கப்படு மானால் அரசுக்கான பாராளுமன்ற பெரும்பான்மைப் பலம் நெருக்கடிக்குள்ளாகாது என்றும் ஆகிவிடாது.

(தொடரும்...)

தமிழில்-யோகர்

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் துன்பக்காட்டுக்கு அழைத்துச் செல்லும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவர் கூறியது இனத்தின் வழமை இவர் கூறியது மகாகொடுமை

போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்த மாட்டோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இச் செவ்வி தமிழ் மக்களை அதிர்ச்சி கொள்ள செய்துள்ளது.

வன்னி பெரு நிலப்பரப்பில் நடந்த மிக கொடூரமான போரும் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்புகள், சொத்தழிவுகள், அங்கவீனங்கள் என்ற ஏகப்பட்ட துன்பங்களுமாக தமிழ் மக்களைப் பேதலிக்க வைத்துக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் தமிழ் மக்களின் மன ஆறுதல் என்பது வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெறும் என்ற ஒரே நம்பிக்கை மட்டுமாகவே உள்ளது.

இருந்தும் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவதற்கு இலங்கை அரசு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவதை அனுமதிக்க மாட்டேன் என்று இந் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்று ஜனாதிபதிப் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறியபோது தமிழ் மக்களின் நாடி நரம்பெல்லாம் நடுங்கிக்கொண்டது.

அட! எங்கள் வாக்கைப்பெற்று பதவிக்கு வந்தவர் சிங்கள மக்களுக்கு இப்படியொரு வாக்கைக் கொடுக்கிறாரே என்ற மன வேதனையின் வெளிப்பாடே நாடி நரம்புகளின் உதறலாயிற்று.

சரி, முன்னைய சிங்கள ஆட்சியாளர்கள் செய்ததை; இனிமேல் ஆட்சிக்கு வரப்போகிறவர் செய்யப் போவதை; நிகழ்கால ஆட்சியில் இருப்பவர் சொல்கிறார் – செய்கிறார்.

இஃது எல்லாம் வழமை என்று மௌனமாக இருந்தாலும், ஜனாதிபதி மைத்திரியின் வார்த்தைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தக்க பதில் கொடுப்பார் என்று தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என அரசாங்கத்தை நாம் கேட்க மாட்டோம் என இரா.சம்பந்தர், சிங்கள ஊடகத்திற்கு செவ்வி கொடுத்த செய்தியை அறிந்த போது,

ஐயா! அவருடையது இனத்தின் வழமை. இவருடையது மகாகொடுமை என்று சொல்வதைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தெரியவில்லை.

எதுவாயினும் நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற அனுமதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதானது,

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் அனுமதியைப் பெற்றுக் கூறப்பட்டது என்று அனுமானிப்பதில் எந்தத் தவறும் இல்லை.

இந்த அனுமானத்தின் ஆதாரம்தான் சிங்கள ஊடகத்திற்கு சம்பந்தர் ஐயா வழங்கிய செவ்வி.

என் செய்வோம்! தமிழனே தமிழனுக்கு மாரகனாகி விட்டபோது...

# கூட்டு எதிர்க்கட்சி வழக்குத் தொடரும்

(கொழும்பு)

வற வரி திருத்தம் தொடர்பிலான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் வழக்குத் தொடரப்படும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினால் பொரளையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் உத்தேச சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்ட 8 நாட்களுக்குள் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட முடியும்.

வழக்குத் தொடர்ந்து சட்டரீதியில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விமல் வீரவன்ச நீதிமன்றின உதவியை நாடியிருக்கா விட்டால் அதிகளவு வரிச சுமையினால் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

வற் வரி குறித்த திருத்தச் சட்டம் எதிர்வரும் 20-ம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நற்கருணை விழா இன்று ஆரம்பம்

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலயவருடாந்த திருவிழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை விழா ஆரம்பமாகும்.

மறுநாள் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் புனித கார்மேல் அன்னையின் பெருவிழா திருப்பலி இடம்பெற்று அன்னையின் திருச்சொரூப பவனியும் இறை ஆசீர்வாதமும் இடம்பெறும். (செ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிரு ந்து 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** ஆனந்த புரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்தியவங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொட்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரட், கொக்காவில் இராணுவ படை முகாம் I, கொக்காவில் இராணுவ படை முகாம் II, கொக்காவில இராணுவ படை முகாம் III, ரூப வாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இரா ணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஆதி விநாயகர் கோவில் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### தனிச்சிறப்புடைமையா... அல்லது சாதாரணமா?

நீங்கள் தனிச் சிறப்புடையவரா...அல்லது சாதாரணமானவரா?

ஆன்மீகப் பாதையில் எது உங்களைத் தனிச் சிறப்புடையவராக்குகிறது?

(எல்லோரும் மௌனமாய் இருக்கின்றனர்). உனது அறிவுத் திறன், கூர்ந்து கவனிக்கும் தன்மை, வெளிப்படுத்தும் திறன் மேலோங்கியிருப்பதால் நீ தனிச் சிறப்பு உடையவன்.

இந்தத் தனிச் சிறப்புத் தன்மைதான் உன்னைச் சாதாரணமானவன் ஆக்குகிறது! (சிரிப்பு) ஒவ்வொருவரும் தாங்கள் ஏதாவது ஒருவிதத்தில் தனிச் சிறப்புடையவர்கள் என எண்ணுகிறார்கள்!

உங்கள் அறிவுத் திறன் மேலோங்கியிருக்கிறது இல்லையா? ஒவ்வொரு காரியத்திலும் நீ மூல காரணத்தைப் பார்க்கிறாய்.தெய்வீகம் அது ஒவ்வொரு சிறு திட்டத்திற்குப் பின்னாலும்,தெய்வத்தின் உயர்ந்த பெரும் திட்டத்தைப் பார்க்கிறாய்.பிறருடைய தவறுகளை அவர்கள் வேண்டுமென்றே செய்ததாக நீ நினைப்பதில்லை.நீ சந்தேக தாமஸ் அல்ல.

**கிரண:**யார் அந்தச் சந்தேக தாமஸ்?

**ஷர்லி :** தாமஸ் ஏசுகிறிஸ்துவையே சந்தேகப்பட்டவன்.

**பானு:** அவனும் ஞானம் அடைந்தான் என்று நினைக்கிறேன்.

**ஸ்டெபேனோ:** ஆமாம் ஆனால் அதிலும் கூட அவனுக்குச் சந்தேகம் தான்!(சிரிப்பு)

**ஸ்ரீஸ்ரீ:** ஆன்மீகப் பாதைக்கு வருவதற்கு முன் உன் உணர்ச்சிகளை நீ கவனித்ததே இல்லை.இப்போது நல்லது, கெட்டது, அன்பு, வெறுப்பு, கோபம், கருணை, வேதனை, இன்பம், துன்பம் என்ற உணர்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கிறாய். உன்னில் இச் சக்தி உயர்ந்திருக்கிறது.

உன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திறமை உயர்ந்திருக்கிறது.எல்லோருக்குள்ளும் மிக உயர்ந்த குணாதிசயங்கள் எல்லாம் உள்ளன. அதிர்ஷ்டம் இல்லாததாலும், மன உளைச்சலாலும் அவர்களால் இந்த நல்ல குணங்களை வெளிப்படுத்த இயலவில்லை. ஆனாலும், உன்னால் அவற்றை வெளிப்படுத்த முடிகிறது.

அதனால்...நீ விசேடமான தனிச் சிறப்புடையவன்!




### குடும்பத்திற்காகச் செலவிடுங்கள்

❖ இறை நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படும் ஒவ்வொரு நற்செயலும் வணக்கமே! தொழுகையும், நோன்பும் வணக்கமே! இல்லற வாழ்வும், வணிகமும், சமூக சேவை ஆகியனவும் வணக்கமே! வாழ்க்கையே வணக்கம்! வணக்கமே வாழ்க்கை!

❖ கதிரவன் எழும் ஒவ்வொரு நாளிலும் உடம்பின் ஒவ்வொரு பாகமும் ஓர் அறத்தைச் செய்ய வேண்டும். இருவருக்கிடையில் நீதியுடன் நடந்து கொள்வதும் அறமே! ஒருவருக்கு வாகனத்தை கொடுத்து உதவுவதும், வாகனத்தில் ஏற உதவுவதும், சரக்குகளை வாகனத்தில் ஏற்ற உதவுவதும் ஓர் அறமே! ஒரு நற்சொல் மொழிவதும் அறமே! தொழுகையை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வோர் அடியும் அறமே! பாதைகளில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் அறமே!

❖ இறைதிருப்தியைப் பெறும் நோக்குடன் மனிதன் தன் குடும்பத்தாருக்கு செலவிடுவதையும் ஓர் அறச்செயலாகவே இறைவன் காண்கின்றான்.

❖ அளவில் சிறிதாக இருப்பினும் தொடர்ந்து நிலையாகச் செய்யும் செயல்களையே இறைவன் நேசிக்கின்றான்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# மிருகங்களை தன்னுடைய வாகனங்களாக கடவுள்கள் கொண்டிருக்க காரணம் என்ன?

ஏன் கடவுள் மிருகங்கள் மீது அமர்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் உள்ளது. பொதுவாகவே மனிதர்களுக்கு மிருகங்கள் என்றால் ஒருவித பயம், அலர்ஜி இருக்கும், ஆனால் கடவுளின் வாகனமாக பார்த்தால் அவற்றை நாம் வணங்குகிறோம்.மலைப்பிரதேசங்களுக்கு சுற்றுலா சென்றால் குரங்கை அடித்து விரட்டும் நபர்கள் ஏராளம், அதுவே தெய்வமாக பார்த்தால் ஆஞ்சநேயனாய் மாறி அருள் வழங்குகிறது இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.ஆமாம் ஏன் கடவுள் மிருகங்கள் மீது அமர்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் உள்ளது. மிருகம் தனக்குரிய இயற்கையான குணத்தை ஆண்டவனின் கட்டளைப்படி கடைப்பிடிக்கிறது. ஆனால், மனிதன் தனக்குரிய நிலையில் இருந்து மாறி மிருக குணத்துடன் அலைகிறான்.அவன் மிருக நிலையில் இருந்து, தெய்வ நிலைக்கு உயர வேண்டும். இதனால் தான், மனதில் எழும் எண்ணங்களை மிருகங்களாக உருவகப்படுத்தி, அவற்றை அடக்க வேண்டும் என்ற அடிப்படையில், நமது தெய்வங்கள் அதன் மீது அமர்ந்துள்ளனர்.அதுமட்டுமின்றி மிருகங்கள் தங்கள் இனத்தைப் பெருக்க வரையறை வைத்துக் கொள்வதில்லை. தன்னைச் சார்ந்த எல்லா மிருகங்களுடனும் உறவு கொள்ளும். பகுத்தறிவு உள்ள மனிதன் அப்படியிருக்கக் கூடாது. தனக்கென ஒருவன் அல்லது ஒருத்தியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மிருக குணத்தை விட்டொழிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது.

# J.P.L. வெற்றிக்கிண்ணம்-2016 ஜொனியன்ஸ் முதலாவது வெற்றி

J.P.L. வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண்டேசன் 4ஆவது வருடமாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்றில் 4 ஆவது போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி சிறிகாமாட்சி அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களை பெற்றனர். தீபன்-30, துவாரகன் -13, பவீந்திரன் -28, கஜீவன் -18, சுதர்ஸன் -16, தீபநாதன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களை பெற்றனர்.

சன்ஜெயன், பிறந்தாபன், கானாமிர்தன் தலா 01 இலக்கினையும் டக்ஸன் -02 இலக்கினையும் அன்புஜன் -03 இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 18.3 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றனர்.


அன்புஜன்-25, கபில்ராஜ்-67, கானாமிர்தன்-10, சன்ஜெயன் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களை பெற்றனர்.

சுதர்ஸன்-01, சுவேந்தன்-01, மோகன்ராஜ்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் சிறந்த வீரராக ஜொனியன்ஸ் அணியை சார்ந்த கபில்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ். ஜொனியன்ஸ் அணி 5.01 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 1.78 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)




## மயூரன் அபார பந்துவீச்சு; தீருவில் அணி வெற்றி

அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் தீருவில் அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது.



முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் 17 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்கள் பெற்றது. தீருவில் சார்பில் திருக்குமரன் 23 ஓட்டங்கள். ரேவடி சார்பில் ரஞ்சன். சஞ்சீவன் தலா 4 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரேவடி அணி 14 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 44 ஓட்டங்கள் பெற்றது. ரேவடி சார்பில் ரஞ்சன் 11 ஓட்டங்கள், தீருவில் சார்பில் மயூரன் 7 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

தீருவில் அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (க)

## சைக்கிள், மரதன் ஓட்டம்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

வடமாகாண ரீதியிலான ஆண்களுக்கான 5 கிலோமீற்றர் மரதன் மற்றும் 50 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி என்பன நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு A-9 வீதி தபாற்கட்டை சந்தி அருகில் உள்ள அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவோர் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்பு-077 309 5745, 077 209 0814, 077 778 2192. (க)

## ரேவடி அணி வெற்றி



அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலக்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்றபோட்டியில்இளங்கதிர் அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரேவடி அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்கள் பெற்றது. ரேவடி சார்பில் உலகராசா 47 ஓட்டங்கள், இளங்கதிர் சார்பில் கனி 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்கள் பெற்றது. இளங்கதிர் சார்பில் கனி 20 ஓட்டங்கள், ரேவடி சார்பில் ரஞ்சன் 4 விக்கெட்டுகள் கைப்பற்றினர். ரேவடி அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (க)

## கோலூன்றி பாய்தலில் மகாஜனா மாணவி தங்கம்



இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட சிரேஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டியில் யா/மகாஜனாக் கல்லூரி மாணவி செல்வி ஜெகநாதன் அனித்தா கோலூன்றிப்பாய்தலில் தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்துள்ளார்.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் (09.07.2016) நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் 3.30 மீற்றர் உயரத்தினை தாண்டி தங்கப்பதக்கத்தை வென்றார். 3.35 மீற்றர் உயரமே இப்போட்டியில் சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-78)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## உதயசூரியனை இலகுவாக வீழ்த்தி றெயின்போ அபார வெற்றி



அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் உதயசூரியன் அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் 15 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 28 ஓட்டங்கள் பெற்றது. உதயசூரியன் சார்பில் அச்சுதன் 09 ஓட்டங்கள், றெயின்போ சார்பில் ருதேஷா. கபிலன் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெயின்போ 2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்கள் பெற்றது. றெயின்போ சார்பில் ருதேஷா 17 ஓட்டங்கள் பெற்றார். றெயின்போ அணி 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (க)

## சென்.அன்ரனிசை வீழ்த்தியது பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப்







பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைவதற்கான போட்டியில் பனங்கட்டுகொட்டு சென். ஜோசப் வி.கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் வி.க. மோதியது. சென்.ஜோசப் வி.க. தமக்குரிய பாணியில் போட்டியின் முதற்பாதி ஆட்டத்தினை எதிரணியை அறியும் ஆட்டமாக பயன்படுத்தியதுடன் 41 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலினை ரெக்சன் பதிவு செய்து கோல் கணக்கினை ஆரம்பித்தார்.

இரண்டாம் பாதி ஆட்டத்தினை ஆட்ட வியூகத்தினை மாற்றி அதிரடியாக ஆடிய சென்.ஜோசப் 55, 65,75,82,86 ஆவது நிமிடங்களில் முறையே ரெக்சன், சிந்துஜன், டிக்கோனிங், சிந்துஜன், டிக்கோனிங் என அதிரடியாக கோல்களை அடித்து ரசிகர்களை அமர்க்களப்படுத்தினர். ஆட்ட நேர முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக 2 கோல்களை அடித்த சென். ஜோசப் வீரர் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை ஆசிரியர் ச.குமரகுருபரன் வழங்கி கௌரவித்தார். (க)

## கஞ்சாவுடன் கைது; அபராதம் விதிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சிப் பகுதியில் 260 மில்லிக் கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றவாளிக்கு இருபதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 260 மில்லிகிராம் கஞ்சாவினை உடைமையில்வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த குற்றவாளிக்கு இருபதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)

• • • • • • • • • • • • • •

(மல்லாவி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவரை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## 16 அத்தியாவசிய...

ஒரு கிலோகிராம் கடலை - 260 ரூபாய், ஒரு கிலோகிராம் கௌபி- 220 ரூபா, 480 கிராம் எடை கொண்ட ரின் மீன் - 140 ரூபாய், 105 கிராம் எடை கொண்ட ரின் மீன் - 70 ரூபாய், ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி - 95 ரூபா, ஒரு கிலோகிராம் கோதுமை மா - 87 ரூபாய், இறக்குமதி செய்யப்பட்ட பால் மா ஒரு கிலோகிராம் - 810 ரூபாய், உள்நாட்டு பால் மா ஒரு கிலோகிராம் - 735 ரூபாய், ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு - 120 ரூபாய், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் - 78 ரூபாய், செத்தல் மிளகாய் ஒரு கிலோகிராம் - 385 ரூபாய், ஒரு கிலோகிராம் கட்டா கருவாடு நிர்ணய விலை - 1,100 ரூபாய், சாலயா கருவாடு ஒரு கிலோகிராம் - 425 ரூபாய், ஒரு கிலோகிராம் மாசியின் விலை - 1,500 ரூபாய், சஸ்டஜன் மாவின் நிர்ணய விலை - 1,500 ரூபாய்.

இதேவேளை உள்நாட்டு உருளை கிழங்குக்கு நிர்ணய விலை விதிக்கப்படவில்லை.

வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர் இந்த நிர்ணயவிலைகள் உடன் அமுலுக்கு வரும் என கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## ராஜபக்ஷர்கள்...

த்தார்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் சரத் பொன்சேகா மேலும் குறிப்பிடுகையில்,

அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்படுவார் என ரவி கருணாநாயக்க கூறியமைக்கு பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. முன்னைய ஆட்சியாளர்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் நிதி குற்றப்புலனாய்வு பிரிவின் ஊடாகவே கையாளப்படுகின்றன. இந்த விசாரணைகள் அனைத்தும் வெளிப்படையாக இடம்பெற்று வருகின்றன.

எனவே இதன்போது விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்கள் நிச்சயமாக கைது செய்யப்படுவார்கள் என்பது திண்ணமாகும். நானும் எத்தனையோ? தடவைகள் ராஜபக்ஷவினர் கைது செய்யப்படுவார்கள் என கூறியிருந்தேன். எனவே அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியதில் எந்த தவறும் கிடையாது.

எவ்வாறாயினும் முன்னைய ஆட்சியின்போது எல்லா விதமான ஊழல் மோசடிகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ளனர்.

எனவே ராஜபக்ஷரகள் அனைவரையும் சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## சமஷ்டியை...

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

நல்லாட்சி எனக் கூறும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தினரை காட்டிக்கொடுக்கும் செயலையே மேற்கொண்டு வருகின்றது. நாட்டில் ஒற்றையாட்சி இடம்பெற வேண்டும் என்பதற்காகவே இராணுவத்தினர் 30 வருடகாலம் போராடி யுத்தத்தை வெற்றி கொண்டனர்.

ஆனால் அரசாங்கம் சமஷ்டி முறையை கொண்டுவந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு மலையகத்தையும் வடக்கை தமிழத் தேசிய கூட்டமைப்புக்கும் கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு அமைப்பதற்கும் ஏற்றவாறு நாட்டை துண்டாட முயற்சிக்கின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என அவர் தெரிவித்தார். (செ-11)

## சிறுமியை திருமணம் செய்த இளைஞன் கைதாகி மறியலில்

(மல்லாவி)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் 15 வயதுச் சிறுமியை திருமணம் செய்த இளைஞரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது,

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் திருமணமான நிலையில் கடந்த திங்கட்கிழமை மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அத்தோடு குறித்த சிறுமியை திருமணம் செய்த இளைஞரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் அறையில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இளைஞரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (செ-15)

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

## வடக்கில் இடம்பெறும் கைதுகளை பிரிட்டன் அதிகாரிகள் கேட்டறிவு



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வடக்கில் நடைபெறும் கைதுகள் தொடர்பாக உண்மை நிலைபரத்தினை அறிந்து கொள்வதற்காக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் 4 பேர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக இணைப்பாளர் ரி.கனகராஜ் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கில் தற்போதைய நிலைபரம் தொடர்பில் கருத்துக்களை அறிவதற்கும் வடக்கில் இருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றவர்கள் தொடர்பில் உண்மையான நிலைபரங்களை அறிந்து கொள்வதற்கு பிரிட்டன் அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்

இதன்போது வடக்கில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடைபெறும் கைதுகள் தொடர்பிலும் சித்திரவதைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர் என அவர் தெரிவித்தார். (செ-9)

## இழுவைப் படகு...

இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுமாயின் அது வெற்றியளிப்பதாகவே அமையும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறித்த இரு நாட்டு மீனவர்களது பிரச்சினை தொடர்பாக யாழ். இந்திய துணைத்தூதுவரிடம் ஊடகங்கள் வினவியபோதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை மீனவர்களில் குறிப்பாக வடக்கு மீனவர்களும் இந்திய மீனவர்களும் உறவுக்காரர்கள் போன்றவர்கள். அவர்களுக்கிடையில் தொப்புள்கொடி உறவு இருக்கின்றது. அந்தவகையில் எமது நோக்கானது இவ்விரு மீனவர்களுக்குமிடையில் எந்தவொரு பிரச்சினையும் இருக்கக் கூடாது என்பதேயாகும்.

இந்திய மீனவர்கள் இழுவை படகுகள் மூலம் மீன்பிடிப்பது தொடர்பில் குற்றச்சாட்டு எழுகின்றன. இந்த விடயத்தை பொறுத்தவரையில் இழுவைப் படகுகள் மூலமான மீன்பிடி தொழில்முறையை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. அதனை யார் கைக்கொண்டாலும் அதனை நாம் ஏற்றுக் கொள்ளப போவதில்லை. இத்தகையதொரு நிலைப்பாட்டில்தான் இந்திய மத்திய அரசாங்கமும் உள்ளது. எனவே இழுவை படகு தொழில்முறையை முற்றாக தடைசெய்ய வேண்டும்.

மேலும் போருக்கு பிற்பட்ட காலத்தை பொறுத்தளவில் வடக்கில் தற்போதுதான் சுமுகமான நிலைமை ஏற்பட்டு வடக்கு மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் அவர்களது வாழ்வாதாரத்தை பற்றியும் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

எனவே இவர்களது பிரச்சினை தொடர்பில் விரைவாக ஓர் தீர்வினை எட்டப்பட வேண்டியுள்ளது.

இதன்படி இருதரப்பு மீனவர்களையும் பேச்சுவார்த்தையொன்றுக்கு அழைத்து அதனூடாக மனிதாபிமான அடிப்படையில் எந்தவொரு தரப்புக்கும் அது வடக்கு மீனவர்களாக இருந்தாலும் சரி தமிழக மீனவர்களாக இருந்தாலும் சரி பாதிப்புக்களோ இழப்புக்களோ ஏற்படாத வகையில் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்திய அரசாங்கமானது ஆழ்கடல் மீன்பிடியை அறிமுகப்படுத்தி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைய முடியாத வகையில் மாற்று தொழில்முறைகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (செ-11)

## தில்லேஸ்வரத்தில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இன்று முற்பகல் 10 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம் இடம்பெறும்.

சங்காபிஷேகக் கிரியைகளை வீணாகான குருபீடத்தின் பீடாதிபதி வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)

## நிதி சேகரிப்பு மோசடி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பெயரால் கட்டுடை மானிப்பாய் பகுதியில் மண்சரிவுக்கு இளைஞர் நிதி சேகரிப்பதாக தொலைபேசி அழைப்புக்கள்கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும் இவ்வாறான எந்த நடவடிக்கை யிலும் பாடசாலைச் சமூகம் ஈடுபடவில்லை எனவும், இவ்வாறானவர்களை அடையாளப்படுத்துமாறு அதிபர் வே.ஞானகாந்தன் தெரிவித்துள்ளார். (செ)

## சம்பந்தன் தெரி...

க்கின்றது.

எனவே இந்த விவகாரத்தில் பங்காளிக் கட்சிகளை உள்ளடக்கியதான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டியது அவசியம் என ரெலோவின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

ஜெனிவா தீர்மானத்தின் அடிப்படையில் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் நிறுவவிருக்கும் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்குபற்ற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு வலியுறுத்தாது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்திருப்பதாக வெளி வந்திருக்கும் செய்தி ஆச்சரியமளிக்கிறது.

இச்செய்தி தொடர்பில் உண்மை என்ன என்பதை தலைவர் சம்பந்தன் மாத்திரமே தெளிவுபடுத்த முடியும்.

ஆனால் ஜெனிவாத் தீர்மானத்தைப் பொறுத்த மட்டில் தமிழர் தரப்பில் எந்தவித விட்டுக் கொடுப்புக்கோ அல்லது சமரசத்துக்கோ இடமில்லை என்பதே எமது கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது என சிறி காந்தா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-1)

## தண்டப்பணம் விதிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி பளைப் பகுதியில் கவனவீனமான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் கவனவனமான முறையில மோடடார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் பளைப் பொலிஸார் கைது செய்த ஒருவரை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## ஆடுகள் மீட்பு

(மல்லாவி)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியிலுள்ள வயல் நிலத்தில் மேய்ந்து கொண்டிருந்தபோது கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை கடத்தப்பட்ட 14 ஆடுகளில் 13 ஆடுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்

வயல் பகுதியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட அரிசி ஆலை ஒன்றின் பின்னால் இருக்கும் தொட்டிக்குள் இருந்தே மேற்படி 13 ஆடுகளும் உயிருடன் மீட்கப்பட்டதுடன், ஓராடு இறந்த நிலையில் மீட்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை வயல் நிலத்தில் மேயவிடப்பட்டிருந்த மேற்படி ஆடுகள் காணாமல் போயிருந்தன. இது தொடர்பில் ஆடுகளின் உரிமையாளரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஆடுகளைத் திருடிய நபர்கள் அதனை பிறிதொரு இடத்தில் தொட்டிக்குள் மறைத்து வைத்துள்ளனர். இதில் ஓராடு மூச்சுத்திணறி இறந்துள்ள நிலையில் ஏனைய ஆடுகள் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

## கொத்துக் குண்டு...

ற்கான வாய்ப்பு ஒருபோதும் இருந்ததில்லை. கொத்துக் குண்டு பிரயோகித்ததாக கூறுவது மாயையாகும் என முன்னாள் இராணுவ தளபதியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று தெரிவித்தார்.

அத்துடன் போர் குற்றம் தொடர்பான உள்ளக விசாரணையின் போது எக்காரணம் கொண்டும் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமளிக்க கூடாது. அரசியலமைப்பில் அதற்கான ஏற்பாடுகள் இல்லை. மாறாக உள்ளக விசாரணையின்போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரவழைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## 4 கிலோ கஞ்சா...

சங்கானை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் கேரளாக் கஞ்சா விற்பனையில் ஈடுபட முயன்ற இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் நான்கு கிலோ நூறு கிராம் நிறையுடைய கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சிறிமான் தெரிவித்தார்.

இக் கஞ்சா வியாபாரத்தினை முறியடிக்கும விதத்தில் பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரினால் ஒரு மாதகாலமாக முயற்சி மேற்கொண்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கஞ்சா கைமாறப்படுவதாக பருத்தித்துறையில் உள்ள மதுவரித் திணைக்களத்தினருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன், மதுவரித திணைக்கள அத்தியட்சகர் மதன்மோகனின் வழிநடத்தலில், பருத்தித்துறை மதுவரித் திணை க்கள பொறுப்பதிகாரி சிறிமான் தலைமையிலான குழுவினர் சென்று மோட் டார் சைக்கிளில் விநியோகிக்க தயாராக வைக்கப்பட்டிருந்த நான்கு கிலோ நூறு கிராம கேரளக் கஞ்சாவினையும் மீட்டதுடன் மாதகலைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரையும் கைது செய்தனர்.

அவரை நேற்று வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 28-ம் திகதி வரை அவருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது. (செ-60)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். பிரதான வீதி, கோவில் வீதி, கொழும்புத்துறை வீதி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 076 850 2992
077 640 5572

(5222)

## அமெ. உதவிச்...

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால், ஜனநாயகம், மனிதவுரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கி, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் மான்பிரீத் சிங் ஆகியோர் நேற்று வியாழக்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

முன்னதாக, வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு சென்ற இவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். இதனையடுத்து திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளில் இவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் பின்னர், கிழக்கு மாகாண ஆளுநர ஒஸ்டின் பெர்ணான்டோவை அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இவர்கள் சந்தித்து, போருக்குப் பின்னரான கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண டனர்.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண சபைக்குச் சென்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் மற்றும் மாகாண சபை அமைச்சர்களை நிஷா தேசாய் பிஸ்வால தலைமையிலான குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதன்போது மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் மற்றும் மாகாண மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர்கள் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தமை குறி ப்பிடத்தக்கது. (செ-11)

## போலி கடவுச்சீட்டு...

கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள தரகர் ஒருவர் மூலமே குறித்த போலி ஆவணங்களை தயாரித்து இத்தாலி செல்ல முற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த இளைஞன் டீ.கே.731 என்ற துருக்கி விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்திலேயே பயணிக்கவிருந்ததாகவும், இவரது ஆவணங்களில் சந்தேகம் கொண்ட விமானநிலைய அதிகாரிகளின் தீவிர விசாரணையை அடுத்து இவரை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள குறித்த தரகர் இரண்டு வாரங்களுக்குள் குறித்த போலி ஆவணங்களை தயார் செய்து கொடுத்துள்ளதோடு, இத்தாலி சென்ற பின்பு அங்கு வசிக்கும் நபர் ஒருவருக்கு 3 இலட்சம் பணத்தினை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான குறித்த சந்தேகநபரை விரைவில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜ ர்ப்படுத்தவுள்ளதாக விமான நிலைய குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித் துள் ளனர். (செ-11)

**உடனடி வேலை வாய்ப்பு**

- விளம்பரத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் அனுபவமும் உள்ள ஆண்,பெண் இருபாலருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
- 6 மாத காலத்திற்குள் உங்கள் திறமையை பொறுத்து குறைந்தது 2 லட்சம் ரூபாயை பெறக்கூடிய வாய்ப்பு.
- தகுதி - O/L

V2 Travels and Tours (Pvt) Ltd.

5 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு நன்மை பெறுங்கள்.

0768226243 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

(சி-5181)

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2016

மாபெரும் கருத்தரங்கு

அரசியல் விஞ்ஞானம்

ஆரம்பம் :- 17,19 திகதிகளில்

நேரம் :- 17.07.2016 → 1.00 pm
19.07.2016 → 8.30 am

S. கோகுலன்

(BA(Hons)pol.spl)

- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

(C-5180)

**Sunjeya உணவகம்**

மீண்டும் கூழ் சண்ஜெயா உணவகத்தில்!

ஒவ்வொரு புதன் (இன்று) மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 11.00 மணி தொடக்கம் ஒடியல் கூழ் சுவைத்து மகிழுங்கள்.

சகலவித சைவ, அசைவ உணவு வகைகளும் உண்டு

(C-5173)

Sunjeya Foodland

No,713, Hospital Road, Jaffna.
Contact No :- 021 221 70 70 / 077 222 13 79

**10% தொடக்கம் 50% வரையான விலைக்கழிவு**



உள்நாட்டு வெளிநாட்டு உறவுகளே!
என்றும் நம்பமுடியாத விலைகளில்

- கல்வி சம்மந்தமான பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரையான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்.
- முன்னணி எழுத்தாளர்களின் எல்லா வகையான அரிய படைப்புக்களும் மலிவு விலையில்.
- ஆய்வுகூட உபகரணங்கள், பேப்பர் வகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், எழுதுகருவிகள், அலுவலக உபகரணங்கள், பிளானல் போட்கள், வைற்போட்கள், பிலிப்சாட் போட்கள்.
- புறொயெக்டர்கள், இசைக்கருவிகள்...

எந்த வகையான அன்பளிப்பு பொருள்கள், நன்கொடை வழங்கும் பொருள்கள் எதுவானாலும் நாட வேண்டிய இடம்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல. 212, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 021 222 5542 acdil@ymail.com

(சி-5195)

**கொழும்பு முன்னனி விரிவுரையாளர்களினால்**
**CA மீட்டல் வகுப்புகள்**

- 100% பரீட்சைக்கான தயார் படுத்தலும் வழிகாட்டலும் வழங்கப்படும்.
- அனைத்து CA கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் பயிற்சி செய்யப்படும்.
- மாதிரி வினாத்தாள்கள் பயிற்சி செய்யப்படும்.
- பரீட்சையில் சித்தியடைவதற்கான நுணுக்கங்கள் ஒவ்வொரு வகுப்பிலும் வழங்கப்படும்.
- தமிழ் விளக்கங்களுடன் கூடிய வகுப்புக்கள்.

Timetable Sep 2016 Exam

KE 2 Wed - 4.30pm - 6.30pm
Kumanan Vettivel

KE 4 Sat -9.00am-1.00pm
Thanushika Rajendran

KE 1 Sat -1.30pm-4.30pm
Gajanithan Veerakaththipillai

வகுப்புக்கள் ஆரம்பம் 19 July 2016

K-AIMS BUSINESS SCHOOL (சி-5194)

K-AIMS BUSINESS SCHOOL
No 149 - 2/1 K.K.S Road,
JAFFNA.

076 826 82 09
0773 722 104

## மரண அறிவித்தல்



### தர்மராஜா சுவர்ணராணி
(பேபி)

முருகேசர் வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மராஜா சுவர்ணராணி 13.07.2016 புதன்கிழமை அன்று இறைபதமெய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் மங்கையற்கரசி தம்பதியினரின் அன்பு மகளும், தர்மராஜாவின் பாசமிகு மனைவியும் அமரர் தவபாலசிங்கம், அமரர் சிவானந்தசிங்கம், அமரர் தேவராணி, கிருஷ்ணகுலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் நிருபன், நிரஜா, நித்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/1, முருகேசர் வீதி,
நல்லூர்.

தகவல்
தர்மராஜா - கணவர்

(சி-5196)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.